# வாலிபர் உலகம்

JESUS REDEEMS MINISTRIES

மலர் 15 | இதழ் 01 | மார்ச் 2024 |
ஆண்டு சந்தா ₹ 100



# இயேசுவின் காயங்கள்

இயேசு, 2000 ஆண்டுகளுக்கு முன்பு நம்மைப் பாவத்திலிருந்து மீட்க, காயங்களை ஏற்றுக் கொண்டார்.

# உள்ளே...

04  தோல்வி ஜெயமாக மாறியது

 எதிர்பாரா பயணம் 12

22  கைபேசியை கையாளு!

 இரயில் பயணம்... 26

## வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.



**30,000 வாலிபர்கள்** கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிக்கை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். **மேலும் தொடர்புக்கு 9750955547**

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

*ஆசிரியர்:* **மோகன் சி. லாசரஸ்** *இணை ஆசிரியர்:* **அவினாஷ்**

*ஆசிரியர் குழு:* **வயலா | ரேச்சல் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண் | காட்வின் | ஜெனிபர் | ரெபேக்கா டேவிட்**

*வடிவமைப்பு:* **'இயேசு விடுவிக்கிறார்' வடிவமைப்பு குழுவினர்**



அன்பான
இளம் நெஞ்சங்களுக்கு
அன்பின் வாழ்த்துக்கள்!

# தலைவாசல்

"அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்" (ஏசாயா 53:3,4).

தன்னுடைய கல்லூரிப் படிப்பை மிகவும் நேர்த்தியாக படித்துக் கொண்டிருந்தான் Ashok. அவனுடைய பிறந்த நாள் அன்று தன் நண்பர்களுக்கு விருந்து கொடுக்க விரும்பினான். அதனால் குறித்த நாளில் அவன் நண்பர்கள் அனைவரும் அவன் வீட்டுக்கு வருவதாக சொல்லி விட்டார்கள். Ashok தன் தந்தையை பார்த்து சொன்ன வார்த்தைகள்; "என் நண்பர்கள் என் பிறந்த நாளை கொண்டாட வீட்டிற்கு வருகிறார்கள், எனவே உங்கள் கொடூரமான முகத்தை காட்டி என் மானத்தை வாங்கி விடாதீர்கள்" என்று மிகவும் கடினமாக பேசினான். அந்த வயதான தகப்பனும் சரி என்று ஒப்புக்கொண்டார்.

குறித்த நாளில் அவன் நண்பர்கள் எல்லோரும் வீட்டுக்கு வந்து Cake வெட்டினார்கள். அப்பொழுது Ashok தெரியாமல் விரலை வெட்டிக் கொண்டான். அப்பொழுது தகப்பன் பாசத்தின் மிகுதியால் வெளியே ஓடி வந்து உதவ முயற்சித்தார். அப்பொழுது Ashokன் நண்பர்கள் எல்லோரும் தகப்பனுடைய அந்த அவலட்சணமான முகத்தைப் பார்த்துவிட்டு முகம் சுளித்து விருந்து வேண்டாம் என்று வீட்டை விட்டு போய் விட்டார்கள். Ashok மிகவும் கோபமடைந்து "ஏன் இப்படி செய்தீர்கள், வெளியே வந்து என் நண்பர்கள் முன்னால் என்னை அவமானபடுத்திவிட்டீர்களே" என்று தகப்பனை மிகவும் மனம் நோகும்படி பேசிவிட்டான்.

உடனே தகப்பன் தன் காயத்திற்கான காரணத்தை சொன்னார். "சிறுவயதில் நீ (Ashok) தொட்டிலில் இருக்கும் போது வீடு திடீரென்று தீ பற்றி எரிய ஆரம்பித்தது; உன்னைக் காப்பாற்ற என்ன செய்வதென்று தெரியாமல், உடனே உள்ளே ஓடி தொட்டிலிலிருந்து உன்னை தூக்கிக்கொண்டு வெளியே ஓடி வரும் போது இந்த காயம் ஏற்பட்டது. உன்னைக் காப்பாற்ற என் அழகை இழந்தேன்" என்று கண்ணீரோடு கூறினார். இதைக்கேட்ட Ashok உள்ளம் உடைந்து போனான். தகப்பனை அணைத்து அந்த உருக்குலைந்த முகத்தை முத்தம் செய்தான்.



**எனக்கன்பான வாலிபனே, 2000 ஆண்டுகளுக்கு முன்பு உன்னை மீட்க, உனக்கு ஒரு அழகிய, ஆசீர்வாதமான வாழ்வைக் கொடுக்க, அவர் உன் பாவத்திற்காக காயங்களை ஏற்றுக் கொண்டார்.**

| | |
|---|---|
| அவர் ஐந்து கண்ட மக்களுக்காக ஐந்து காயம் ஏற்றவர். | அவர் காயங்களை ஏற்றார், உனக்கு சுகம் கொடுக்க. |
| அவர் காயங்களினால் உனக்கு விடுதலை உண்டு. | அவர் காயங்களினால் உனக்கு இரட்சிப்பு உண்டு. |
| உன் பாவங்களுக்காக காயமுற வேண்டிய நீ, | அவர் காயங்களால் ஆற்றி, தேற்றப்பட்டாய். |

இயேசுவின் காயத்திற்கும், தழும்பிற்கும் ஒரு காரணம் உண்டு. அவர் காயத்தின் விளைவாக எழும்பிய ஒவ்வொரு வாலிபனும் தீப்பிளம்பாக அவருக்காக எரிந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர் காயத்தால் மீட்பும், விடுதலையும் பெற்ற நீ, என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்?

"சிந்தித்தது போதும் செயல்படு! சாய்ந்து, வீழ்ந்தது போதும் ஸ்திரப்படு!

கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**

சாட்சி தொகுப்பு: பெனிட்டா

# தோல்வி ஜெயமாக மாறியது





**இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து, பெற்றோருக்கு கீழ்ப்படியாமல், படிப்பில் தோல்விக்கு மேல் தோல்வியை சந்தித்து வந்த சகோதரி தனம், இன்றைக்கு அரசு அலுவலகத்தில் பணிசெய்து கொண்டே ஊழியமும் செய்து வருகிறார். அவர்களது வெற்றிக்கான காரணம் என்ன என்பதை அவர்களிடமே கேட்டு தெரிந்து கொள்வோமா?**

**உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் சொல்லுங்களேன்?**

என் பெயர் தனம். நான் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகாவில் உள்ள வாடிக்கோட்டை என்ற கிராமத்தில், இயேசுவை அறியாத பாரம்பரியமும், பக்தியும் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். என் பெற்றோருக்கு நான் இரண்டாவது பிள்ளை ஆவேன். என் வீட்டில் நான் மட்டும் தான் இரட்சிக்கப்பட்டுள்ளேன்.

**உங்கள் சிறு பிராயத்தைப் பற்றி சொல்லுங்களேன்?**

என் வீட்டில் கடைசிப்பிள்ளையாக நான் இருந்ததால் மிகவும் செல்லமாக வளர்ந்தேன். விவசாய குடும்பத்தில் பிறந்த நான் குடும்பத்தின் ஏழ்மை நிலை புரியாமல் வளர்ந்தேன். நான் எதை பெற வேண்டுமென்று விரும்புகிறேனோ அதை அடைந்தே தீருவேன்.



வீட்டில் பணம் இருக்கிறதா? இல்லையா? என்று நினைக்காமல் அடம்பிடித்து கேட்டு வாங்குவேன். இதனால் என் பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டனர். அவர்களை அநேக முறை கண்ணீர் சிந்தவும் வைத்துள்ளேன். வளர வளர என் பெற்றோரை அடித்துக் காயப்படுத்தவும் ஆரம்பித்தேன். என் பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளையாக, எதிர்த்து பேசுகிற பிள்ளையாக அவர்களை கனம்பண்ணாத பிள்ளையாகவே சிறுப்பிராயத்தில் இருந்தேன்.

**சரி... அப்போ நீங்கள் எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள்?**

என்னோட இரட்சிப்பு என்பது என் கல்வியோடு தொடர்புடையது. நான் பள்ளி படிக்கும்போது என் தோழி எனக்கு இயேசப்பாவை குறித்து சொல்லுவாள். ஆனால், நான் அவள் வார்த்தைகளை அசட்டை செய்து, விளையாட்டாகக் கேட்பேன். அவள் தொடர்ந்து என்னிடம் சொல்லிக் கொண்டே இருப்பாள். தேர்வு போன்ற நாட்களில் மட்டும் தேவைக்காக இயேசப்பாவை

பயன்படுத்திக் கொள்வேன். அதைத் தொடர்ந்து, கடந்த 2018ஆம் ஆண்டு சுருக்கெழுத்து தட்டச்சர் படிப்பு படித்துக் கொண்டிருக்கும்போது தொடர் தோல்விகள் ஏற்பட ஆரம்பித்தது. இதனால் மிகவும் பாதிக்கப்பட்டு, மன உளைச்சலுக்குள்ளானேன். அப்போது முதல் முறையாக என் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணித்து அவரை சொந்த இரட்சகராக உள்ளத்தில் ஏற்றுக்கொண்டேன். அப்போது ஒரு தெய்வீக சமாதானம் என் உள்ளத்தை நிரப்பியது.

**சமாதானம் பெற்றுக் கொண்டீர்கள், ஓகே... உங்கள் பள்ளிப் படிப்பை குறித்து சொல்லுங்களேன்?**

பள்ளிக்கு போகிறது என்பது எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால், எனக்கு சில பாடங்கள் கடினமாக இருந்ததால் என் பள்ளி வாழ்க்கை எனக்கு கசப்பாக மாற ஆரம்பித்தது. எனது படிப்பு வெறுப்பாக மாறினது. தமிழ் வாசிக்கவே தடுமாறுவேன். எழுத்துப் பிழைகள் வரும். ஆங்கிலம் என்றாலே எனக்கு பாகற்காய் போன்ற கசப்பான பாடமாகும். ஆங்கிலம் வாசிக்க நான் மிகவும் கஷ்டப்படுவேன். அதிக எழுத்துப் பிழைகள் வரும். தமிழாவது எழுத்துக்கூட்டி வாசிப்பேன். ஆங்கிலம் அது கூட தெரியாமல் ஆசிரியர் மற்றும் சக மாணவர்கள் முன் மிகவும் அவமானப்படுத்தப்பட்டு நிற்பேன். இதனால், நான் சில தவறுகளை செய்ய ஆரம்பித்தேன். ஆசிரியர் படிக்க சொன்ன கேள்விக்கான பதில்களை முன்கூட்டியே எழுதி வைக்க ஆரம்பித்தேன். அதையும் என் ஆசிரியர் கண்டுபிடித்ததால் மேலும் அவமானங்களை சந்தித்தேன். என் பள்ளிப் படிப்பில் 6 – 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு முன்பு வரை ஆங்கிலப் பாடத்தில் தொடர் தோல்விகளை தான் சந்தித்து இருக்கிறேன். ஒருமுறை கூட தேர்ச்சி பெற்றதில்லை. பொதுத் தேர்விலும் தோல்வி அடைந்து பள்ளிக்கு அவமானம் தான் கொண்டு வருவேன் என என் ஆசிரியரால் எதிர்ப்பார்க்கப்பட்டேன்.

மேலும், 10–ஆம் வகுப்பு பொதுத்தேர்வைக் குறித்த பயம் என்னை நெருக்க ஆரம்பித்தது. நான் தோல்வியடைந்து, எல்லார் முன்பும் அவமானப்பட்டுவிடுவேனோ என என் உள்ளம் கலங்க ஆரம்பித்தது. தேர்வு எழுதும் முன்னே தேர்வு முடிவு வெளிவரும் நாளைக்குறித்த பயமும், நடுக்கமும் என்னை பற்றிப்பிடித்தது. இதனால், தனிமையில் மிகவும் யோசிக்க ஆரம்பித்தேன். ‘‘இப்படிப்பட்ட நெருக்கமான நிலையில் இயேசப்பா மட்டும் தான் எனக்கு உதவி செய்ய முடியும்; என் ஆசிரியரோ, என் தோழிகளோ, என் பெற்றோரோ உதவ முடியாது’’ என உணர்ந்து, இயேசப்பாவைச் சார்ந்து படிக்க ஆரம்பித்தேன். எனக்கு ஜெயம் தாங்க இயேசப்பா, நான் வெட்கப்பட்டு போகக்கூடாது என ஜெபித்தேன். தேவன் என் வெட்கத்தை மாற்றி ஆங்கிலப் பாடத்தில் 58 மதிப்பெண் பெறவும், 500-க்கு 408 மதிப்பெண்கள் பெறவும் கிருபை செய்தார். இப்படியாக தேவன் என் தலையை நிமிரச் செய்தார்.



அதைத்தொடர்ந்து, உயர்நிலைப் படிப்பிலும் அவரைச் சார்ந்து படிக்க ஆரம்பித்தேன். தெரியாத ஆங்கில வார்த்தைகளுக்கு மேலே தமிழில் எழுதி வைத்து படிக்க ஆரம்பித்தேன். இதனால் என் ஆசிரியர் எழுத சொல்லுகிற கேள்வி பதில்களுக்கு உடனடியாக பதில் எழுதி கொண்டு போவேன். நான் பார்த்து தான் எழுதுகிறேன் என என் ஆசிரியர் அவர் அருகில் அமர்ந்து மறுபடியும் எழுத சொல்லுவார். நான் சரியாக எழுதுவதைப் பார்த்து அவர் ஆச்சரியப்பட்டார். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக என் நிந்தை மாற ஆரம்பித்தது. அனைத்து ஆசிரியர்களும் என்னுடன் நன்கு பேச ஆரம்பித்தனர். அதன்பின், என் பள்ளி வாழ்க்கை மிக இனிமையானதாக மாற ஆரம்பித்தது. என் ஆசிரியர்களும் என்னை படிக்கும்படி உற்சாகப்படுத்தினர். நானும் ஜெபத்துடன் படித்தேன். இதன் விளைவாக பன்னிரெண்டாம் வகுப்பில் வணிகவியல் பிரிவில் 1039 மார்க் பெறும்படி தேவன் கிருபை செய்தார்.

பள்ளிப் படிப்பை முடித்ததும் நான் சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய வகுப்புகளுக்கு செல்ல ஆரம்பித்தேன். அதுவரை ஆண்டவருக்கு கீழ்படிந்து

கொண்டிருந்த நான் சில இடங்களில் பாவத்தில் விழ ஆரம்பித்தேன். என் ஜெபம் குறைய ஆரம்பித்தது. அவரை சார்ந்திருந்த அனுபவம் குறைய ஆரம்பித்தது. இதனால் என் படிப்பில் நான் தோல்வியை சந்தித்தேன். தொடர்ந்து தோல்வியின் பாதைகள் தான். நான் பாவத்தை விட்டு மனம்திரும்பும் வரை தேவன் எனக்கு ஜெயத்தை தரவில்லை. 2 ஆண்டுகள் படிக்க வேண்டிய படிப்பை 4 ஆண்டுகள் படித்தேன். இறுதியாக என் பாவத்தை உணர்ந்து நான் மனம்திரும்பிய பின்னரே தேவன் எனக்கு சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சு படிப்பில் ஜெயத்தை கொடுத்தார்.

**சூப்பர்... தட்டச்சு பயிற்சி முடித்த நீங்கள் தற்போது என்ன செய்கிறீர்கள்?**

அதைத் தொடர்ந்து, அரசு தேர்வுக்கு நான் ஜெபத்துடன் தயாராக ஆரம்பித்தேன். ஆலயத்திற்கு தவறாமல் செல்வேன். 'என்னையும் ஒரு அரசு அதிகாரியாக மாற்றுங்க இயேசப்பா' என்று ஜெபத்தோடு அரசு தேர்வை எழுதினேன். தேர்வில் வெற்றி பெற்றேன். கடந்த ஆண்டு (2023) அக்டோபர் மாதம் முதல் நான் ஒரு அரசு துறையில் பணியாற்றி வருகிறேன்.



எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் அவருடைய கரத்தினால் ஆகும் என்ற வார்த்தையின்படி, எதற்கும் உதவாத ஞானமற்ற உலகத்தால், உறவுகளால் அற்பமாய் பார்க்கப்பட்ட என்னை இன்று தேவன் மேன்மைப்படுத்தி கனப்படுத்தி வைத்திருக்கிறார்.

**வாசிக்கிற வாலிபருக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நம்மை உயர்த்த தேவனுக்கு ஒரு நிமிடம் போதும். ஆனால் அவர் நம்மிடம் எதிர்ப்பார்ப்பது கீழ்ப்படிதலே. நீங்களும் அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிய உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களால் முடிந்த வரை கடினமாக உழையுங்கள். தேவன் ஜெயத்தைத் தருவார். உங்களையும் சாட்சியாக நிறுத்துவார்.



**அன்பான வாலிபர்களே! நீங்கள் கூட தோல்விக்கு மேல் தோல்வியை சந்தித்து சமுதாயத்தில் தலைகுனிந்து நிற்கிறீர்களா? சகோதரி தனம் எதிர்ப்புகள் மத்தியிலும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவரை சார்ந்து நின்றதால் இன்றைக்கு அரசாங்க பணியில் தேவன் அவரை உயர்த்தி வைத்திருக்கிறார். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டாலும் தேவன் அவருடைய அநாதி தீர்மானத்தின்படி நம்மை இழுத்துக்கொள்வார். ஆனால் அவருக்கு நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். இன்றைக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். தேவன் உங்கள் வாழ்க்கையை மாற்றுவார்.**

## தேர்வுக்கு மாணவ, மாணவியர் செய்ய வேண்டியவை...




1. முகப்புச்சீட்டில் உரிய இடத்தில் கையொப்பமிடவேண்டும்.
2. விடைத்தாளில் ஒரு பக்கத்திற்கு 20 முதல் 25 வரிகள்வரை எழுதவேண்டும்.
3. விடைத்தாளின் இருபுறத்திலும் எழுதவேண்டும்.
4. செய்முறைகள் யாவும் விடைத்தாளின் கீழ் பகுதியில் இடம்பெற வேண்டும்.
5. வினா எண் தவறாமல் எழுதவேண்டும் .
6. இருவிடைகளுக்கிடையே இடைவெளி விட்டு எழுதவேண்டும்.
7. வினாத்தாளின் வரிசை ( A,&B ) மதிப்பெண்கள் பக்கத்தில் குறிக்கப்பட வேண்டும்.
8. விடைத்தாளில் நீலம் , கருப்புமை கொண்ட பேனாவால் விடைகளை தெளிவாக எழுதவேண்டும்.
9. விடைத்தாளில் எழுதாத பக்கங்களில் குறுக்குக்கோடு இடவேண்டும்.

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

**வேதத்திலுள்ள இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. கீழே உள்ள சிலுவை வடிவிற்குள் விடையை நிரப்பி வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**




## வினாக்கள்

1. இயேசுவின் வஸ்திரங்களை எத்தனை பங்காக பிரித்தார்கள்?
2. எந்த தீர்க்கதரிசியை மாதிரியாக வைத்து இயேசு தனது உயிர்த்தெழுதலை முன்னறிவித்தார்?
3. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று இயேசு யாரிடம் கூறினார்?
4. இயேசுவின் உடலுக்கு வாசனை திரவியங்களை பூச வந்தவர் யார்?
5. பெண்கள் இயேசு உயிர்த்தெழுந்ததை சீஷர்களுக்கு அறிவிக்க சென்றபோது, இயேசு அவர்களுக்கு எதிர்பட்டு கூறியது என்ன?
6. இயேசு உயிர்த்தெழுந்ததை கேள்விப்பட்ட சீஷர்கள் என்ன செய்தார்கள்?
7. உயிர்த்தெழுந்த இயேசுவை முதன்முதலில் சீஷர்கள் எங்கே பார்த்தார்கள்?
8. எருசலேமில் எத்தனை சீஷர்கள் இயேசுவை சந்தித்தார்கள்?
9. இயேசு எத்தனை நாட்களுக்குப் பிறகு தன்னுடைய சீஷர்களுக்கு இரண்டாவதாக தரிசனமானார்?
10. இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்த பிரதான கட்டளை என்ன?

## கடந்த மாத வெற்றியாளர்:

சகோதரி **சூசன்** (சென்னை)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.03.2024**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

## கடந்த மாத விடைகள்


1. சிட்சிக்கிறார் (நீதி. 3:12)
2. யூதர்கள் (யோவான் 5:42)
3. சாலொமோன் (1 இராஜா. 3:3)
4. அன்பு (1 பேதுரு 4:8)
5. நியாயப்பிரமாணம் (ரோமர் 13:10)
6. கற்பனை (2 யோவான் 1:6)
7. அக்கிரமம் (மத். 24:12)
8. சிநேகிதன் (யோவான் 15:13)
9. நெருக்கி (2 கொரி. 5:14)
10. தேவ பக்தி (2 பேதுரு 1:7)

ஆலோசனை: அவி

Heart Beat

# தேர்வு பயம்






என் பெயர் காஞ்சனா. நான் 12ம் வகுப்பு படிக்கிறேன். என்னுடைய அரசுத் தேர்வைக் குறித்து மிகவும் பயமாக உள்ளது. தேர்வு நாட்கள் நெருங்க நெருங்க என் பயம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அந்த பயம் நாளடைவில் மன அழுத்தமாக மாறுகின்றது.

மேலும் என்னால் எல்லா பாடத்திலும் தேர்ச்சி பெற முடியவில்லை. Commerce group படிக்கின்றேன், 6 பாடங்களில் 4 பாடம் failஆகி விடுகிறேன்.

எனவே தேர்வை எழுதவே மனம் இல்லை. எல்லோரும் என்னை மிகவும் கேலி செய்கிறார்கள். என்னுடைய மொத்த totalலே 600க்கு 120 மதிப்பெண்கள் தான். என் வீட்டிலும் என்னை மிகவும் திட்டிக் கொண்டே இருக்கிறார்கள். ஒரு பக்கம் குடிக்கின்ற அப்பா. எப்பொழுதும் சண்டை போடும் அம்மா.

இப்படி பல நெருக்கங்கள். படிக்க வேண்டும் என்ற எண்ணமே வரவில்லை. ஒரு பக்கம் குடும்ப சூழல் சரியாக இல்லை, மறுபக்கம் தோல்வியின் எண்ணமும், எதிர்காலத்தைக் குறித்த பயமும் என்னை ஒவ்வொரு நாளும் பாதிக்கின்றது.

சில நேரம் 'உன்னை நேசிக்க யாருமில்லை, உனக்கு எந்த திறமையும், படிக்க புத்தியும் இல்லை, நீ வாழ்ந்து என்ன பயன், எனவே நீ செத்துவிடு'' என்ற சத்தமும் என் காதில் கேட்குது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. என்னால் தேர்வில் தேர்ச்சி பெறவும் முடியவில்லை. என் வாழ்க்கையில் முன்னேறவும் முடியவில்லை. எனக்கு உதவி செய்யுங்கள்.
**– காஞ்சனா, திருப்பூர்.**

அன்பு தங்கை காஞ்சனா, உங்களின் கடிதம் படிப்பதற்கு மிகவும் வேதனையாக இருந்தது. படிப்பில் ஏற்படுகின்ற தொடர் தோல்வியும், மன வேதனை உண்டாக்கும் குடும்ப சூழலும், உங்களை செயலிழக்க வைக்கும் தேர்வு பயமும் நன்கு புரிகின்றது.

காஞ்சனா, உங்களின் பயம் தான் உங்களை செயல்படவிடாமல் பாதிக்கின்றது. இந்த பயம் உங்களிடமிருந்து விலகும் போது, உங்களால் இயல்பாக செயல்பட முடியும். இந்த பயத்தை சரியாக கையாளும் போது உங்களால் எளிதாக மேற்கொள்ள முடியும். குறிப்பாக தேர்வு நாட்களில் ஏற்படும் பயத்திற்கு காரணம், உங்களின் பழைய தோல்விகள் என்றே சொல்லாம். சிலமுறை தோல்வி அடைந்ததால், அந்த 4 பாடங்களில் தேர்ச்சி பெறவே முடியாது என்று தீர்மானிக்க முடியாது.

**Thomas Alva Edison - Electric Bulb** கண்டுபிடித்து சாதனை செய்த போது, ஒரு பத்திரிக்கையாளர் அவரை




பார்த்து, இந்த எலக்ட்ரிக் பல்ப்பை 10,000 முறை தோல்விக்கு பின்னரே கண்டுபிடித்தீர்களா? என்று கேட்டார். அதற்கு Thomas Alva Edison 10,000 முறை நான் தோல்வியடையவில்லை, மாறாக 10,000 வழியில் இந்த எலக்ட்ரிக் பல்ப் எரியாது என்பதை தெரிந்து கொண்டேன் என்று மிகவும் அழுத்தமாக சொன்னார்.

ஒருமுறை தோல்வி அடைந்தாலே நாம் சோர்ந்து போகிறோம். ஆனால் தன் கண்டுபிடிப்பின் பாதையில் 10,000 முறை தோல்வியுற்றாலும், சலிக்காமல் அடுத்த முறையும் முயற்சித்து சாதனைப் படைத்து, இருண்ட உலகில் ஒளியை ஏற்றினார் Edison.

## காஞ்சனா, நீங்கள் வெற்றிப் படியை அடைய சில டிப்ஸ்...

* முதலாவது முடியும் என்று தன்னம்பிக்கையான எண்ணத்தை மனதில் கொள்ள வேண்டும்.

* எத்தனை தொடர் தோல்விகள் வந்தாலும் "முடியும்" என்றும், மறுபடியும் முயற்சிக்கும் எண்ணமும் கொள்ள வேண்டும்.

* உங்களுக்குக் கடினமாக தோன்றுகிற 4 பாடங்களையும் முடியும் என்ற புதிய எண்ணத்தோடு படிக்க முயலுங்கள்.

* உங்கள் ஆசிரியர்களின் உதவியையும், நன்றாக படிக்கும் நண்பர்களின் ஒத்துழைப்பையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

* வீட்டில் படிப்பதற்கான சூழ்நிலை இல்லை என்றால் உங்கள் பள்ளி அல்லது சில பாதுகாப்பான பொது இடங்களில் படிக்க முயலுங்கள் (மொட்டை மாடி, நூலகம் மற்றும் நண்பர்களின் இல்லத்தில் படிக்கலாம்).

* உங்கள் குடும்ப சூழ்நிலை உங்களின் எதிர்காலத்தை முடக்க முடியாது என்று ஆழமாக தீர்மானியுங்கள்.

* காஞ்சனா, உங்களைப் போல தோல்வியின் விளிம்பில் இருந்த பல மாணவர்களுக்கு, இயேசு கிறிஸ்து ஒரு புதிய நம்பிக்கையையும், பெலத்தையும் தந்து விழுந்துப் போன வாழ்க்கையைக் கட்டி எழுப்பியுள்ளார். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோ. 1:7).

* முதலாவது அவர் கொடுக்கும் பெலன் (Power) உங்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை கொடுத்து, பல தொடர் தோல்விக்கு பின்னாலும் 'என்னால் முடியும்' என்ற உணர்வோடு செயல்பட பெலன் கொடுக்கும் (You will get the new power to process your studies).

* இரண்டாவதாக, அவர் கொடுக்கும் விருப்பம். இதுவரை நீங்கள் படிக்காமல் இருக்க காரணம் படிக்க விருப்பம் இல்லை. இயேசு உங்களுக்கு படிக்க ஒரு புதிய விருப்பத்தைக் கொடுப்பதால் விருப்பத்தோடு நீங்கள் படிக்க ஆரம்பிக்கும் போது, கண்டிப்பாக வெற்றி நிச்சயம்.

* மூன்றாவதாக, தெளிந்த புத்தியையும் கொடுக்கிறார். அநேக நேரம் நீங்கள், குழம்பி போய் என்ன படிப்பது, எப்படி படிப்பது என்று கலங்கி இருப்பீர்கள். ஆனால் இப்பொழுது இயேசு உங்களுக்கு தெளிந்த புத்தியை கொடுப்பதினால் உங்களால் எல்லாவற்றையும் நேர்த்தியாக யோசித்து, யூகித்து செய்யும் திறன் உண்டாகும்.

எனவே காஞ்சனா சோர்ந்து போகவும் வேண்டாம். உங்கள் காதுகளில் கேட்கும் சத்தத்திற்கு செவி கொடுக்கவும் வேண்டாம். இயேசு உங்களை வாழ வைக்கும் தேவன். நீங்கள் வெற்றியோடு வாழ நிச்சயம் உதவி செய்வார். எனவே பயப்பட வேண்டாம். இயேசுவின் மீது உங்கள் நம்பிக்கை உறுதியாக இருக்கும் போது, உங்கள் பயம் நீங்கி, பெலன் பெற்று, விருப்பத்தைப் பெற்று, தெளிந்த புத்தியையும் பெற்று வெற்றியோடு வாழ முடியும். All the Best!



முகப்பு செய்தி:
சதீஷ்

# இயேசுவின் காயங்கள்

நமது உடலில் சிறிய காயம் அல்லது கீறல் ஏற்பட்டால் எந்தவிதமான முயற்சியும் செய்யாமல் சில நாட்களில் தானாகவே குணம் அடைந்துவிடுவதை பார்க்க முடிகிறது. இத்தகைய சிறிய காயங்கள் நம்மை பெரிய கவலையடைய செய்வதில்லை. ஆனால் நமது சரீரத்தில் குணப்படுத்த முடியாத காயங்களும், பெலவீனங்களும், நோய்களும் உண்டாகும் போது அவை ஒன்றன்பின் ஒன்று பெரிய பாதிப்பைப் ஏற்படுத்தும். இப்படிப்பட்ட காயங்களை உலகில் காணப்படும் மருந்துகளால் குணப்படுத்த முடியும். ஆனால் இவ்வுலகத்தால் குணப்படுத்த முடியாத காயங்களும் நோய்களும் நமக்கு ஏற்படும்போது **“அவருடைய (இயேசுவின்) தழும்புகளால் குணமாகிறோம்” (ஏசாயா 53:5).**

இயேசு சிலுவையை சுமப்பதற்கும் வாரினால் அடிக்கப்படுவதற்கும் தன்னைத் தானே ஒப்புக் கொடுத்தபடியினால் முந்தின மனுஷன் ஆதாமின் மீறுதலினால் உண்டான காயத்தைப் பிந்தி வந்தவராகிய இயேசுவின் காயத்தின் தழும்புகள் குணமாக்கிற்று. **“அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்கு கிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்” (ஏசாயா 50:6)** என்ற வேத வாக்கியம் நிறைவேறும்படிக்கு நம்முடைய பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் உண்டாகும் நோய்களையும் பெலவீனங்களையும் மாற்றுவதற்கு இயேசு தன்னை சிலுவையில் அர்ப்பணித்தார். வாரினால் அடித்தல் என்பது ஏதோ ஒரு சாட்டையாலோ, பெல்ட்டாலோ அடிப்பது அல்ல. ரோம அரசாங்கம் ஒருவருக்கு பயங்கரமான தண்டனையை சரீரத்திலே கொடுக்க நினைத்தால் வாரினால்தான் அடிப்பார்கள். சதை பிட்கப்படுதலும் இரத்தம் சிந்துதலும் சர்வ சாதாரணமாய் நடக்கும்.

இயேசுவின் சரீரத்தில் விழுந்த ஒவ்வொரு அடியும் எவ்வளவு ஆழத்திற்கு சென்று அவருடைய சதைகளை கிழித்திருக்கும் என்று சற்றே யோசித்துப் பாருங்கள். ‘அவரது முதுகு உழுத நிலம் போல ஆயிற்று’ (சங். 129:3). நாம் சுகமாய் வாழ வேண்டும் என்பதற்காக இவ்வளவு காயங்களையும், வலிகளையும் இயேசு சிலுவையில் தாங்கிக் கொண்டு தேவ நீதியை வெளிப்படுத்தினார்.

நமது சரீரத்தில் உண்டாகும் காயங்கள் சில நாட்கள் வேதனையை உண்டாக்கி மறைந்து விடும். ஆனால் நமது இருதயத்தில் ஏற்படும் காயங்கள் நமது நித்திய வாழ்வை பாதிக்கும். உடைந்துபோன மனது குணப்படாவிட்டால் மனிதன் நடமாடும் பிணத்தைப் போல மாறி விடுவான், அவனது முழு வாழ்வும் பாதிக்கப்படும். எல்லாவிதமான ஆஸ்தியும் அந்தஸ்தும் இருந்த சகேயுவின் உள்ளத்தில் ஏதோ ஒரு காயம் இருந்திருக்கக் கூடும். என்னை நேசிக்கவும் அன்பு செலுத்தவும் யாருமே இல்லையே என்ற ஏக்கமும் வருத்தமும் அவனது இருதயத்தை கடுமையாக காயப்படுத்தி இருக்கும். அதனால்தான் ‘எல்லா ஜனங்களும் என்னை வெறுத்து ஒதுக்கினாலும் இயேசு எப்படிப்பட்டவர்?’ என்று பார்ப்பதற்கு அவன் இருதயம் ஏங்கியது. காயப்பட்ட அவனது இருதயத்தை காயம் கட்டும்படி இயேசு **“அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய்**



**இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்" (லூக்கா 19:5)** என்றார். இந்த வார்த்தை அவன் இருதயத்தில் சந்தோஷத்தைக் கொண்டு வந்ததுமட்டுமன்றி, நொறுங்குண்டதும் நருங்கண்டதுமான அவனது இருதயம் பெலன் அடைந்தது மட்டுமில்லாமல் நித்திய வாழ்வையும் அவன் சுதந்தரித்துக் கொண்டான். **"இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்" (சங்கீதம் 147:3)** என்ற வேத வாக்கியங்களின்படி இயேசு சகேயுவின் இருதயத்தை காயம் கட்டி குணமாக்கினார்.

நமது வெளி வாழ்வில் நாம் எவ்வளவு நல்லவர்களாகத் தோற்றமளித்தாலும், தன் உண்மை நிலையை உணர்ந்து நொறுங்குண்டு அறிக்கையிடுகிற இருதயத்தையும், நொந்துபோன ஆவியோடு தம்மை நோக்கிக் கூப்பிடுகிற ஆத்துமாக்களையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை.

இயேசுவின் பிரதான சீடர்களில் ஒருவராய் இருந்த பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்தப் பின்பும் **"கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார்" (லூக்கா 22:61)**. அந்த ஒரே பார்வையில் பேதுரு தன்னுடைய தவறை உணர்ந்து, 'இயேசு சொன்ன மாதிரியே நான் செய்து விட்டேனே! எதை செய்ய மாட்டேன் என்ற சொன்னேனோ அதை செய்து விட்டேனே!' என்று இருதயம் நொருங்குண்டு மனம் கசந்து அழுதான். குற்றவுணர்ச்சியால் மனம் சுக்குநூறாக உடைந்து போய் முற்றத்தை விட்டு வெளியேறினான். **"தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" (சங். 51:17)** என்ற வசனத்தின்படி தன் தவறை உணர்ந்த பேதுருவின் இருதயத்தை தேற்றும்படி உயிர்த்தெழுந்த இயேசு அவரைத் தேடிப்போய் காயங்கட்டி குணப்படுத்தி, தனது அன்பை வெளிப்படுத்தினார்.



**எனக்கன்பான வாலிபர்களே, இன்றைக்கு இருக்கும் மருந்துவமும் மருந்துகளும் நமக்குள் இருக்கும் வியாதியை கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்க உதவுமே தவிர, நிரந்தரமாக வியாதியைக் குணப்படுத்தாது. ஆனால் "நான் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை விசுவாசிக்கிறேன்" என்றும் "அவர் சிந்தின இரத்தம் என் சரீரத்தையும் இருதயத்தின் காயங்களையும் தேற்றும்" என்றும் நீங்கள் விசுவாசிக்கும் போது குணப்படுவீர்கள்.**



சாதனை: சுமா

# எதிர்பாரா பயணம்

இளம் வாலிபர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். ‘உன்னால் சாதிக்க முடியாது’ என்று பலர் நம்மிடம் கூறியிருப்பார்கள். அவர்கள் சொல்லிய வார்த்தைகள் கடினமாக இருப்பதால், உடனே ‘சாதித்து காட்டுறனா இல்லையானு பாருங்க’ என்று உத்வேகத்துடன் வாக்குறுதி அளிப்போம். ஆனால் நாட்கள் செல்ல செல்ல தோல்வியும் அவமானமும் நம்மை கட்டிச் சேரும் போது நாம் அளித்த வாக்குறுதி மெல்ல மெல்ல நம்மை விட்டுச் செல்ல ஆரம்பிக்கும். ஒருவேளை இதை வாசிக்கும் நீங்கள் இந்த நிலையில் இருக்கிறீர்களா? Don’t worry! உங்கள் வாக்குறுதியை நீங்கள் நிறைவேற்ற வேண்டிய நேரம் இது. உங்களை உற்சாகப்படுத்தக்கூடிய சாதனையாளரின் வெற்றிப் பயணம் உங்களுக்காக.

**Maria Conceicao** போர்ச்சுக்கல்லை **(Portugal)** சேர்ந்தவர். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். மரியாவின் தாயார் ஏழ்மையில் வாடியதால், மரியா கிறிஸ்டியானா என்ற பெண் மரியாவை தன் குழந்தையாக தத்தெடுத்தார். அவருக்கு ஆறு குழந்தைகள். ஏழாவதாக மரியாவை வளர்க்க முன்வந்தார். அவர் ஒரு தூய்மைப் பணியாளர். அவர்தான் அன்பையும் பரிவையும் பிற குழந்தைகளிடம் எப்படிக் காண்பிப்பது என்று மரியாவுக்குக் கற்றுக்கொடுத்தார். பள்ளிப் படிப்பை முடித்து விட்டு எமிரேட் ஏர்லைன்ஸில் விமான பணிப்பெண்ணாகத் தன் வாழ்க்கை பயணத்தை ஆரம்பித்தார் மரியா. விமானத்தில் அவரின் வேலை காபி, டீ, டிபன் கொடுப்பது.

ஒருநாள் மரியா பணியாற்றிக் கொண்டிருந்த விமானம் பங்களாதேஷில் இருக்கும் டாக்காவில் நின்றது. விமானம் புறப்பட நிறைய நேரம் ஆகும் என்றதால் டாக்காவை சுற்றிப் பார்க்க கிளம்பினார் மரியா. இந்த நிகழ்வு மரியாவின் வாழ்க்கையையே மாற்றிப் போட்டது. டாக்காவில் மரியா பார்த்தவை எல்லாம் பசியில் துவண்டு இருந்த சிறுவர்கள், ஏழ்மையின் உச்சத்தில் இருந்த அநேக குடும்பங்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று பேசினார் மரியா. அங்கிருந்து திரும்பும் போது, ‘‘குறைந்தது 600 குழந்தைகளை வறுமையில் இருந்து மீட்பேன்’’ என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு திரும்பினார்.



‘வாக்குறுதியை எப்படி நிறைவேற்ற போகின்றோம்’ என்ற எண்ணம் அவர் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. தான் சம்பாதிக்கும் இந்த தொகை வாக்குறுதியை

நிறைவேற்ற போதாது என்று முடிவெடுத்து, விமானப் பணிப்பெண் வேலையிலிருந்து விலகினார். 'பெரிய அளவில் சாதித்தால் நிறைய நிதி உதவி கிடைக்கும்' என்று சிலர் கூறியதன் விளைவாக விடாமுயற்சி, பயிற்சி மற்றும் தன்னம்பிக்கையை கொண்டு,



- தான்சானியாவில் இருக்கும் கிளிமஞ்சாரோ மலைமீது ஏறி சாதனைப் படைத்தார்.
- எவரெஸ்டில் ஏறிய முதல் போர்ச்சுக்கீசிய பெண் என்ற சாதனையையும் படைத்தார்.
- ஆறே வாரங்களில் ஏழு கண்டங்களில், ஏழு மாரத்தான் போட்டிகளில் கலந்து கொண்டு ஓடினார்.

இதுபோன்ற அநேக சாதனைகளைப் படைத்தார். கின்னஸ் சாதனை மூலம் சாதித்த பணத்தை பங்களாதேஷ் குழந்தைகளின் கல்வி செலவுக்காக உபயோகித்தார். இவரின் வளர்ப்பு தாயாரின் பெயரில் மரியா கிறிஸ்டினா **Foundation**னும் செயல்பட்டு வருகின்றது. முதலில் 39 குழந்தைகளுடன் ஆரம்பித்த அவருடைய சேவை, தற்போது 600 குழந்தைகளில் வந்து நிற்கிறது. வியந்து பார்க்கும் சாதனைப் பெண்ணாக வலம் வருகின்றார்.



**இதை வாசிக்கும் அன்பு நண்பர்களே! மரியா விளையாட்டு வீராங்கனையாக வளரவில்லை. ஆனால் '600 குழந்தைகளை காப்பாற்றுவேன்' என்று அவர் கொடுத்த வாக்குறுதி 10 கின்னஸ் சாதனைகளை நிகழ்த்த அவர்களை உத்வேகப்படுத்தியது. நீங்களும் அநேக நேரங்களில் நான் 'சாதித்து காட்டுவேன்' என்று அநேக வாக்குறுதிகள் அளித்திருப்பீர்கள். செய்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டீர்களா? அல்லது மறந்து விட்டீர்களா? சாதனையாளன் எந்த சாக்குபோக்குகளையும் சொல்லி மூலையில் ஒதுங்கமாட்டான். எல்லா சூழ்நிலையையும் எதிர்த்து முன்னேறுவான். இதுவே சரியான நேரம் உங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற துணிந்து செயல்படுங்கள்!**


# மும்பையில்... YOUTH PRAYER CONFERENCE

நாள் : ஏப்ரல் 7, ஞாயிற்று கிழமை

நேரம் : மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை

இடம்: Morning Star School,
அசோக் மில் காம்பவுண்ட், சீயோன் பந்த்ரா லிங்க் ரோடு
ஷஹீல் ஹோட்டல் எதிர்புறம், தாராவி, மும்பை



**செய்தியும் ஜெபமும் : சகோ. சாம் ஜெபராஜ்**

தொடர்புக்கு : 9004882470 | 9664050567 | 8082410410

செய்தி: மோகன் சி. லாசரஸ்





# எதற்காக சிலுவை!!

"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்" (மத். 20:28).

இந்த உலகில் பிறந்த எந்த மனிதனும் 'நான் வாழ விரும்புகிறேன்' என்று தான் சொல்வார்கள். ஆனால் இயேசு மட்டுமே 'என் ஜீவனைக் கொடுப்பதற்காக, நான் இந்த உலகத்திற்கு வந்தேன்' என்பதாக சொன்னார். அவர் சொன்னபடியே, அவருடைய 33½ வயதில் கல்வாரி சிலுவையில் மரிக்க தன்னை ஒப்புக்கொடுத்தார்.

அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள் (யோவான் 19:17,18). இயேசு சிலுவையை சுமந்து கொண்டு எருசலேம் வழியாக சென்று கொல்கொதா என்ற மலையில் சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவருடைய இரண்டு கைகளிலும் ஆணியடிக்கப்பட்டு இரத்தம் வடிந்தது. அவருடைய தலையில் முள்முடி சூட்டப்பட்டதால் முகத்தில் இரத்தம் வடிந்தது. அவருடைய கால்களில் ஆணியடிக்கப்பட்டு இரத்தம் வடிந்தது. இரண்டு கள்ளர்களுக்கு நடுவில் ஒரு கள்ளனைப் போல அவர் தொங்கி அந்த சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்தார்.

## நம்மை உண்டாக்கின கடவுள், ஏன் ஒரு கள்ளனைப் போல சாக வேண்டும்?

எப்படி ஒரு காலத்தில் இங்கிலாந்து தேசம் உலகத்தின் பல நாடுகளை ஆட்சி செய்ததோ, அதேபோல இஸ்ரவேல் தேசத்தையும் ரோம அரசங்கம் அடிமைப்படுத்தி ஆளுகை செய்தது. ரோம அரசாங்கத்தை யாராவது எதிர்த்தாலோ, அவர்களுக்கு விரோதமாக செயல்பட்டாலோ சிலுவை மரணம் என்கிறதான மிகக் கொடிதான மரண தண்டனைக் கொடுப்பார்கள். ஆகவே அந்த சர்வாதிகார ஆட்சியைப் பார்த்து மக்களெல்லாம் பயந்து நடுங்குவார்கள். ஒரு மனிதனை சிலுவையில் அறைய ஒப்புக் கொடுத்துவிட்டால், 39 முறை வாரினால் அடித்து சித்திரவதை செய்வார்கள். வாரினால் அடிப்பது என்பது, அது ஒரு சாதாரண சவுக்கு அல்ல. அதன் நுனியில் இரும்பு குண்டுகள் வைத்து, அதற்கு நடுவில் தூண்டில் முட்களைப் போல முட்கள் இருக்கும். ஒருமுறை முதுகில் அடிக்கும்போதே சதைகளைக் கிழித்துக் கொண்டு வரும். அப்படி 39 முறை இயேசு அந்த வாரினால் அடிக்கப்பட்டார். அவருடைய முதுகிலுள்ள சதையெல்லாம் கிழிக்கப்பட்டது. இந்த வேதனைக்கு பிறகு மிக பாரமான சிலுவையை தன் தோளின் மீது சுமந்து சென்றார். (அவர் சுமந்த அந்த சிலுவை 180 கிலோ எடை கொண்டது. அதன் நீளம் 15 அடியும், அகலம் 8 அடியுமாய் இருந்தது).



இயேசு அடிபட்டு, சரீரம் கிழிக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் இருக்கும்போது, தட்டுத்தடுமாறி அந்த பார சிலுவையை சுமந்து கொண்டு சென்றார். மதத்தலைவர்கள் அவரை அவமானப்படுத்தினார்கள், கேவலப்படுத்தினார்கள். அவர்மீது பொறாமைக் கொண்டவர்கள் இயேசுவை எள்ளி நகையாடினார்கள். இயேசுவை கொல்கதா மேட்டுக்கு கொண்டு வந்தபோது, அவருடைய வஸ்திரங்களை எல்லாம் களைந்து, அவரை சிலுவையில் கிடத்தி ஆணியடித்து தொங்க விட்டார்கள். ஒரு ஆரோக்கியமான ஒரு மனிதன் அந்த சிலுவையில் மரிப்பதற்கு 11 மணி நேரம் ஆகும் என்று சரித்திரம் சொல்கிறது. ஆனால் இயேசு 6 மணி நேரம் அந்த சிலுவையில் தொங்கி மரித்தார் என்பதாக வேதத்தில் பார்க்கிறோம்.



## இயேசு ஏன் இந்த கொடூரமான மரணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்?

அவர் மரித்து உயிர்த்தெழ வேண்டியது அவசியமாக இருந்தது. மரண தண்டனை கொடுக்கும் அதிகாரம் பெற்றவர் பிலாத்து என்கிற ரோம கவர்னர். இயேசுவின்மீது பொறாமை கொண்ட மதவாதிகள், இயேசுவைக் கொண்டு போய் கவர்னருக்கு முன்பாக நிறுத்தி, பொய்யான குற்றச்சாட்டுகளைச் சொல்லி, இயேசுவைக் கொல்ல வேண்டுமென்று ஆலோசனை பண்ணினர். பிலாத்து எல்லாவற்றையும் விசாரித்து விட்டு, 'இவரிடத்தில் எந்த ஒரு குற்றத்தையும் நான் காணவில்லை; இவர் குற்றமற்றவர், நீங்கள் சொல்கிற ஒரு குற்றமும் இவரிடத்தில் இல்லை, நீங்கள் பொய்யானக் குற்றச்சாட்டை சொல்கிறீர்கள்' என்று அவர் தீர்ப்பு சொல்லிவிட்டார். ஆனால் அந்த மதவாதிகள், 'இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும், இல்லாவிட்டால் உங்களுடைய பதவியை நாங்கள் பறித்து விடுவோம்' என்று பிலாத்துவை மிரட்டியதால், தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள, இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தான் என்பதாக வேதத்தில் பார்க்கிறோம்.

## இயேசு குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்ட பிறகும், எதற்காக சிலுவையில் அறையப்பட வேண்டும்?

இயேசுவை சிலுவையில் யாரும் அறைய முடியாது. எந்த நீதிமன்ற தீர்ப்பும் அவரை சிலுவைக்கு கொண்டு செல்ல முடியாது. ரோம அரசாங்கமும் அவரை சிலுவையில் அறைய முடியாது. எந்த மதவாதிகளும் அவரை சிலுவையில் அறைய முடியாது. 'நமக்காக, நம்முடைய பாவங்களுக்காக இயேசு தம்மைத் தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்' (கலா. 1:4) என்பதாக எழுதப்பட்டிருக்கிறது. 'என் உயிரை எடுக்க ஒருவருக்கும் அதிகாரம் இல்லை. எந்த அரசாங்கமும் என் உயிரை எடுக்க முடியாது. நானே என் உயிரை கொடுக்கிறேன், அதை திரும்பவும் எடுத்துக் கொள்வேன்' என்று இயேசு சென்னார். 'என் ஜீவனைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை திரும்ப எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு' (யோவான் 10:18) என்று இயேசு சொல்கிறார். அவர் சொன்னதைப்போலவே, இயேசு சிலுவையில் உயிரைக் கொடுத்து, மூன்றாவது நாள் உயிரோடு எழுந்து இன்றும் ஜீவிக்கிறார். இன்றைக்கும் எருசலேமுக்கு போனால், இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்த அந்த இடம் இருக்கிறது. அவரை கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள். மூன்றாவது நாள் மரணத்தை ஜெயித்து உயிரோடுகூட எழுந்தார். அவர் இன்றைக்கும் உயிரோடுகூட இருக்கிறார்.

**எனக்கன்பான வாலிப மகனே, மகளே! எந்த பாவமும் அறியாத இயேசு உனக்காக, எனக்காக சிலுவை மரணத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். நீங்கள் கிறிஸ்தவராக இருக்கலாம், கிறிஸ்தவரல்லாதவராக இருக்கலாம்; இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்காகவும், இயேசு சிலுவையில் மரிக்க தன்னை ஒப்புக்கொடுத்தார். மரணத்தை வென்று உயிரோடு எழுந்து இன்றும் உயிரோடு இருக்கும் நம் சர்வ வல்லமையுள்ள தேவனை இன்று உன் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள ஆயத்தமா?**

வேதாகம கதாபாத்திரம்: சுமா




இத்தொடரில் இந்த மாதம் நாம் பார்க்கவிருக்கும் முத்து, பெபேயாள் (Phoebe). பெபேயாளைப் பற்றி வேதாகமத்தில் இரண்டே வசனங்கள் மட்டுமே உள்ளன (ரோமர் 16:1,2). பெபேயாள் என்ற பெயரின் அர்த்தம் பிரகாசம் அல்லது ஜொலிப்பு என்பதாகும். பெயரின் அர்த்தம் போலவே இவர் கிறிஸ்துவுக்காக ஜொலித்தார். பெபேயாள் கெங்கிரேயா ஊரைச் சேர்ந்தவள். பெபேயாளைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் அதிகம் பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் பெபேயாள் இல்லை என்றால் ரோம நிருபம், ரோமத் திருச்சபையை அடைந்திருக்க முடியாது. ஏனென்றால் பெபேயாளின் ஊழியம் ரோம நிருபத்தை கெங்கிரேயாவிலிருந்து பத்திரமாக ரோமத் திருச்சபையில் சேர்ப்பதே. சாதாரணமாக சொல்லப் போனால் பெபேயாள் Postwomanஆக இருந்துள்ளார். Postwoman தானே இது என்ன பெரிய பிரமாதம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அந்தக்கால கட்டத்தில் எந்த வாகன வசதியும் இல்லாமல் ஒரு பெண் கிறிஸ்துவுக்காக உண்மையாகத் தன் வேலையை செய்துள்ளார்.

கடினமாக ஊழியம் செய்து கிறிஸ்துவுக்காக வைராக்கியமாக நின்ற அப்போஸ்தலனாகிய பவுலிடம் பாராட்டு வாங்குவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் பவுல் பெபேயாளை தன்னுடைய ஆவிக்குரிய சகோதரியாக பார்க்கின்றார். பெபேயாள் பவுலுக்கு சகோதரி என்ற நிலையில் மட்டும் இருந்துவிடவில்லை. பெபேயாளின் உண்மையான ஊழியம் அவர்களை பரிசுத்தவான்கள் பட்டியலில் சேர்க்கும் அளவுக்கு உயர்த்தியுள்ளது. அதுமட்டுமல்லாமல் பெபேயாள் எல்லாருக்கும், விசேஷமாக அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் ஆதரவாயிருந்தாள். அதனால் தான் அவர்களை கெங்கிரேயா ஊர் சபையின் ஊழியக்காரி என்று பவுல் கூறுகின்றார்.

பெபேயாளின் ஊழியம் சிறியது என்றாலும் அதை செய்ய அவர் முன்வராதிருந்திருந்தால் "தேவனுடைய அன்பு, பாவத்தின் சம்பளம் என்ன? ஆவிக்குரிய மனிதனின் நிலை என்ன?" போன்ற ரோம நிருபத்தில் உள்ள அனைத்துக் காரியங்களையும் நாம் அறிந்திருக்க முடியாது. இந்த ஊழியத்தை பொறுப்புடன் செய்த பெபேயாள் மிகச் சிறந்த பெண்மணி.

**இதை வாசிக்கும் வாலிபர்களே, உங்களுடைய ஊழியம் சிறியதாக இருந்தாலும் பெபேயாள் போல உண்மையாகவும் உற்சாகத்துடனும் செய்து கிறிஸ்துவுக்காக பிரகாசியுங்கள்.**






# இந்திய பெண் சாதனையாளர்கள்



## சாய்னா நேவால் (பேட்மின்டன்)

ஒலிம்பிக்கில் காலிறுதி வரை முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை தன் வசமாக்கியவர் சாய்னா நேவால். 2012ல் லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வெண்கலம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையைப் படைத்தார். இந்தியாவில் பேட்மின்டன் விளையாட்டில் பெண்களும் பெரிய அளவில் சாதிக்க முடியும் என்று உணர்த்தியோடு, பல இளம் பெண்களுக்கு உத்வேகத்தை அளித்தவர். சாய்னாவின் விடாமுயற்சி 24 சர்வதேச சாம்பியன் பட்டங்களை பெறவும், குடியரசுத் தலைவர் கையில் விருதுகளை வாங்கவும் செய்தது. இளம் வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இவரது சொந்த ஊரான ஹரியானாவில் பேட்மின்டன் அகாடமி திட்டத்தில் இணைந்து பணியாற்றி வருகிறார்.



## மேரி கோம் (குத்துச்சண்டை வீராங்கனை)

இவர் இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த குத்துச்சண்டை வீராங்கனை ஆவார். 2020ஆம் ஆண்டு பத்ம விபூசண் விருதினைப் பெற்றார். இவர் உலக மகளிர் குத்துச்சண்டை போட்டியில் தொடர்ச்சியாக 5 முறை தங்கப்பதக்கம் வென்ற முதலாவது இந்தியாவின் வீராங்கனை ஆவார். இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரைச் சேர்ந்த மேரி கோம் மூன்று பிள்ளைகளின் தாய் ஆவார்.



## அன்னா ராஜம் மல்ஹோத்ரா (இந்தியாவின் முதல் பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரி)

இவர் இந்தியாவின் முதல் பெண் இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஆவார். இவர் கேரளத்தின், ஆலப்புழா மாவட்டம், நிரணம் என்ற ஊரில் ஒட்டவேலில் ஓ.ஏ. ஜார்ஜ் மற்றும் அன்னா பால் ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். 1950ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி வெற்றி பெற்றார். இதன் மூலம் சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரியாக அவர் பொறுப்பேற்றார். ராஜாஜி உள்ளிட்ட 7 முதல்வர்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். 1989ஆம் ஆண்டு இவருக்கு பத்ம பூஷன் விருது வழங்கப்பட்டது.



## ஹினா ஜெய்ஸ்வால் (இந்திய விமானப்படையின் முதல் பெண் இன்ஜினியர்)

சண்டிகரை சேர்ந்த ஃப்ளைட் லெப்டினனட் ஹினா ஜெய்ஸ்வால், இந்திய விமானப் படையில் (IAF) சேர்க்கப்பட்ட முதல் பெண் விமானப் பொறியாளர் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார். ஜனவரி 5ஆம் தேதி IAF இன் பொறியியல் பிரிவில் பணியமர்த்தப்பட்ட ஜெய்ஸ்வால், துப்பாக்கிச் சூடு குழுவின் தலைவராகவும், விமானத்தின் முன்னணி மேற்பரப்பில் பேட்டரி தளபதியாகவும் பணியாற்றினார்.

# Achievers 2024

(தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை)








கடந்த ஜனவரி மாதம் 26ஆம் தேதி குடியரசு தினத்தன்று நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான Achievers கூடுகை நடத்தப்பட்டது. இக்கூடுகையில் சுமார் 3200க்கும் அதிகமான மாணவ மாணவியர் கலந்து கொண்டார்கள். பாடல் ஆராதனை வேளை, டிப்ஸ், மற்றும் சாதனையாளர்களின் நேரடி சாட்சிகள் வந்திருந்த மாணவர்களை உற்சாகப்படுத்தின. கடந்த வருடங்களில் Achievers கூடுகையில் கலந்துகொண்டு சாதித்தவர்களின் சாட்சிகள் அநேகருடைய மனதில் புதிய நம்பிக்கையை உண்டாக்கினது. சகோ. மோகன் சி லாசரஸ் அவர்கள் 'தேர்வில் துணை நிற்கும் தேவன்' என்ற தலைப்பில் செய்தி கொடுத்து வந்திருந்த மாணவர்களுக்காக ஜெபித்து ஆசீர்வதித்து அனுப்பினார்கள். தேர்வைக் குறித்த பயத்தோடும் மனக்குழப்பத்தோடும் வந்திருந்த அநேகர் பயங்கள் நீங்கியதோடு, குழப்பங்கள் மாறி "என்னால் சாதிக்க முடியும் " என்ற நம்பிக்கையுடன் 'அடுத்த ஆண்டு நானும் இதேபோல் சாட்சி சொல்வேன்' என்ற தீர்மானத்துடன் கடந்து சென்றார்கள்.





# ஆன்லைன் கடன்

நாடு முழுவதும் 3 ஆண்டுகளில் 5000க்கும் மேற்பட்டோர் ஆன்லைன் கடனால் தற்கொலை செய்து கொண்டதாக அதிகாரப்பூர்வமாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. டிஜிட்டல் முறையில் பெறப்படும் இந்தக் கடனானது ஆன்லைன் கடன் என்று மக்களால் அழைக்கப்படுகிறது. கடன் வாங்கி விட்டு திரும்ப செலுத்த முடியாத சூழலில் சிக்கிக் கொண்டால், கழுத்தை இறுக்கும் கயிறாகவே இது மாறிவிடுகிறது. முதலில் வட்டி இல்லா கடன், மிகக் குறைந்த விகிதத்தில் வட்டி, என்றெல்லாம் சொல்லி பெரும் தொகையை கடனாக பெறலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றனர். ஆனால் இந்த கடனைப் பெற்று சில தவணைகள் செலுத்திய பிறகு தான் கந்து வட்டி, மீட்டர் வட்டியை விட அதிகமான விகிதத்தில் ஆன்லைன் கடன்களுக்கு வட்டி செல்கிறது.

### ஜெபக்குறிப்புகள்

1. ஆன்லைன் மூலமாக கடன் பெற நினைக்கும் வாடிக்கையாளர்கள் கடன் வாங்குவது பாவம் என்பதை உணர்ந்து கொள்ள ஜெபியுங்கள்.

2. டிஜிட்டல் முறையில் கடன் கொடுத்து மக்களை துன்புறுத்தும் ஆன்லைன் Appகள் தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

3. சுமார் 5000க்கும் மேலானவர்கள் தற்கொலைகள் செய்துள்ள இந்த அவல நிலை இன்னும் நீடிக்காமல் தடுக்கப்பட ஜெபியுங்கள்.

4. ஜனங்களுக்குள் விழிப்புணர்வு உண்டாகவும், வட்டி அதிகமாக வசூலிப்பவர்கள் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவும் ஜெபியுங்கள்.

# ஜெபக்கையேடு மார்ச் 2024

# பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்

இந்தியாவில் ஆண்டுதோறும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் வன்கொடுமைக்குள்ளாகின்றனர் என ஐ.நா. புள்ளி விவரம் சொல்கிறது. ஒருமணி நேரத்திற்கு 39 பாலியல் வழக்குகள் பதிவாகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 2,78,886 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 75.8 லட்சம் பெண்கள் வசிக்கும் டெல்லியில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. டெல்லியில் 1 லட்சம் பெண்களில் 182 பேர் பாதிக்கப்படுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. சர்வதேச அளவில் 85 கோடியே 20 லட்சம் பெண்கள் தங்களது 15 வயதிலிருந்தே பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. உலகளவில் 15 முதல் 25 வயதிற்குட்பட்ட 4 பெண்களில் ஒருவர் (25%) அதாவது சுமார் 641 மில்லியன் பெண்கள் தங்களது 20 வயதை எட்டுவதற்குள் பாலியல் அல்லது உடல் ரீதியான துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக ஆய்வு கூறுகிறது

### ஜெபக்குறிப்புகள்

1. பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் பெண்கள் விடுவிக்கப்படவும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவும் ஜெபியுங்கள்.

2. இந்தியாவில் வாழும் பெண்களுக்கு பாதுகாப்பு உண்டாகவும், குற்றங்கள் தடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

3. இளம் வாலிப வயதில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் பெண் பிள்ளைகள் மேல் தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.

4. நம் நாட்டிலுள்ள பெண்களுக்கு விழிப்புணர்வு உண்டாகவும், அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும் ஜெபியுங்கள்.

ஜெபம்: லெனின்.டா

# ஆன்லைன் மோகம்

உலகளவில் ஆபாச படம் பார்ப்பதில் இந்திய தேசம் மூன்றாம் இடத்தில் உள்ளது. அதில் 30% பேர் பெண்கள். 18 முதல் 24 வயதுள்ளவர்கள் 44% ஆகும். 25 முதல் 34 வயதுள்ளவர்கள் 41% என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கிறதுன்றன. 46% இந்தியர்கள் இணையத்தை பயன்படுத்துகின்றனர். ஆன்லைனில் அதிக நேரம் செலவழிக்கும் குழந்தைகள் ஆபாசப்படங்களுக்கு அடிமையாகிவிடுகின்றன. 2020-21 ம் ஆண்டில் நாடு முழுவதும் சைபர் குற்றங்கள் 12% அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆபாச இணைய தளங்களை மத்திய அரசாங்கம் தடை செய்த பிறகும், வலைத்தளங்களில் எளிதாக ஆபாச வீடியோக்களைப் பார்க்க முடிகிறது.

## ஜெபக்குறிப்புகள்

1. ஆபாசப் படங்களைப் பார்க்கும் பழக்கங்களில் சிக்கி இருக்கும் ஒவ்வொருவரும் மீட்கப்பட ஜெபியுங்கள்.

2. மத்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பல வெப்சைட்டுகள் மற்றும் செயலிகள் வேறு பெயரில் இயங்கி வருவதை அரசு தடுத்து நிறுத்த ஜெபியுங்கள்.

3. ஆபாசப் படங்களைப் பார்ப்பது பாவமல்ல என்ற மனநிலை மாறி, அந்த பாவத்திலிருந்து விடுதலை பெற ஜெபியுங்கள்.

4. ஆபாசப்படங்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சிறுபிள்ளைகள் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.










# தேர்தல்

இந்திய சுதந்திரத்திற்கு பிறகு இதுவரை 17 பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இந்தியாவில் 543 மக்கள் தொகுதிகள் உள்ளன. பாராளுமன்றத்தில் லோக்சபா உறுப்பினர்களின் பதவிக்காலம் ஜூன் 16, 2024 அன்று முடிவடைகிறது. இந்தியாவில் 28 மாநிலங்களும், 8 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. 91 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். கடந்த 2019 தேர்தலில் 267 பாராளுமன்ற உறுப்பினர்கள் முதல்முறை புதிதாக பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இந்திய தேசத்தில் லோக்சபா தொகுதிகள் (பாராளுமன்ற தொகுதிகள்) 543 உண்டு. அதில் 524 தொகுதிகள் 28 மாநிலங்களிலும் மீதமுள்ள 19 தொகுதிகள் 8 யூனியன் பிரதேசங்களிலும் உள்ளன.

## ஜெபக்குறிப்புகள்

1. 2024ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் தேவ ஆளுகை உண்டாகவும், கர்த்தருக்கு சித்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

2. வாக்களிக்கவிருக்கும் சுமார் 91 கோடி மக்களின் மனக்கண்கள் திறக்கப்படவும், சரியான உறுப்பினரை தேர்ந்தெடுக்க சரியான முறையில் வாக்களிக்கவும் ஜெபியுங்கள்.

3. கள்ள ஓட்டுகள் போடாமல் தடுக்கப்பட தேர்தல் ஆணையம் மற்றும் காவல்துறை விழிப்புடன் செயல்பட ஜெபியுங்கள்.

4. தேர்தலுக்கு ஆயத்தப்படும் கட்சிகள் எந்தவித சட்டவிரோதமான செயல்களிலும் ஈடுபடாதபடிக்கு ஜெபியுங்கள்.

தகவல்: காட்வின்

TEC - 2

# கைபேசியை கையாளு!

**HELLO FRIENDS!** கடந்த மாதம் **DIGITAL WELLBEING** என்ற **OPTION**ல் உள்ள **SCREEN TIME** மற்றும் **APP TIMERS** பற்றி அறிந்து கொண்டோம்.



அது உங்களுக்கு useful ஆக இருந்திருக்கும் என்றும், அதனைப் பயன்படுத்தி அநேகர் உங்கள் நேரத்தை விரயமாக்காமல் சிறந்த பயனுள்ள முறையில் உபயோகித்திருப்பீர்கள் என்றும் நம்புகிறோம். இந்த மாதமும் உங்களுக்கு புதிய ஒரு settingsஐ கற்றுத்தர நாங்கள் தயாராக உள்ளோம். பொதுவாக நம் வாழ்வில் இடறல்கள் வருவது சாதாரண காரியம்.

நாம் பரிசுத்தமாய் வாழ முயற்சிக்கும்போது சாத்தான் நமக்கு இடறல்களைக் கொண்டு வருவான். மனிதர்கள் மூலமாகவோ அல்லது சூழ்நிலைகள் மூலமாகவோ அல்லது இயற்கை மூலமாகவோ இடறல்கள் உண்டாக்க முயற்சி செய்வான். மனிதர்கள் மூலமாக; நாம் ஏதாவது காரியம் செய்ய முற்படும்போது, அதை செய்ய விடாமல் தடுப்பது, தவறாக பேசுவது போன்றவை, நம்மை சோர்வுபடுத்தும் காரியங்களை செய்வதன் மூலம் நாம் செய்யும் காரியம் ஒழுங்காக செய்ய முடியாமல் தடைபட்டுப்போகும்.

இயேசுவும் ஒருமுறை **“இடறல்கள் வராமல்போவது கூடாதகாரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!” (லூக்கா 17:1)** என்று குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து, சூழ்நிலைகளால் வரும் இடறல் என்பது நாம் ஒரு காரியம் செய்யத் துவங்கும் போது ‘ஏதோ ஒரு சூழ்நிலை, வீட்டில் ஏற்படும் காரியம், சரீரத்தில்






ஏற்படும் எதிர்பாரா பெலவீனம்' போன்ற சூழ்நிலைகளால் நாம் செய்யும் காரியம் தடைபடும். அடுத்து இயற்கையால் கூட இடறல்கள் ஏற்படும். எங்காவது செல்லவேண்டிய நேரத்தில் மழை வந்து இடறல்கள் ஏற்படலாம். நாம் அதைப்பார்த்து செல்ல வேண்டிய இடத்திற்கு செல்லாமல் முடங்கி விடுவோம்.

இப்படி பல இடறல்கள் உண்டாக்கும் வழிகள் இருந்தாலும், இந்த tech உலகில் மொபைல் phone பயன்பாடு அநேக வாலிபர்களுக்கு மிகப்பெரும் இடறலாக உள்ளது.

தேவை இல்லாத apps மூலமாகவும் தேவை இல்லாத advertisements மூலமாகவும் கூட வாலிபர்களின் பரிசுத்த வாழ்க்கைக்கு இடறல் வருகிறது.

சில வேளைகளில் ஆபத்தான பாவங்களில் அடிமைப்படாவிட்டாலும், மொபைல் போனில் வரும் notification கூட நம்மை அடிக்கடி அதை கையிலேயே வைத்திருக்க ஏவுகிறது.

இப்படிப்பட்ட அடிமைத்தனத்தில் இருந்து வெளியே வர, இடறல்களில் இருந்து தப்பிக்க, ஒரு வழி உண்டு. SETTINGS→DIGITAL WELLBEING AND PARENTAL CONTROLS சென்று பார்த்தால் focus mode, மற்றும் bedtime mode என இருக்கும். இந்த focus mode பயன்படுத்தி நீங்கள் படிக்கும் நேரம் வேலைப்பார்க்கும் நேரம் என வாழ்க்கைக்கு தேவையான நேரங்களில் இந்த mode on செய்து கொள்ளலாம்.




Focus modeக்கு உள்ளே சென்றால் அதில் நீங்கள் தேவைப்படும் நேரத்திற்கு அதாவது நீங்கள் படிக்கும் அல்லது வேலைப்பார்க்கும் நேரத்திற்கு மட்டும் தேவை இல்லாத சில applicationஐ அணைத்து வைத்து முக்கியமான appsஐ மட்டும் enable செய்து வைத்துக்கொள்ளலாம்.

இதன் மூலம் தேவை இல்லாத appsகளின் notifications கூட நீங்கள் படிக்கும் போதோ அல்லது வேலை பார்க்கும் போதோ உங்களை தொந்தரவு செய்யாது. உங்களுக்கு இடறல் ஏற்படுத்தாது.

அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன் (கலாத்தியர் 6:4) என்னும் வசனத்திற்கு ஏற்றபடி நாம் நம்மை நாமே சோதித்து பரிசுத்த வாழ்க்கையை காத்துக்கொள்வோம்.

Sleep mode மூலம் நீங்கள் தூங்கும் போது எந்தவிதமான இடறலும் இல்லாமல் நீங்கள் தூங்கும்படியாய் அது உதவி செய்யும்.

**ஓகே friends!**
**இம்மாத Tech info**
**உங்களுக்கு பயனுள்ளதாக**
**இருந்திருக்கும் என்று**
**நம்புகிறேன்.**
**மீண்டும் அடுத்தமாதம்**
**மற்றுமொரு**
**infoவுடன் உங்களை**
**சந்திக்கிறேன். Bye!**

# Revival IGNITERS

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## Monthly Fellowship

## EVERY 1st SUNDAY (3rd MARCH)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (9th March)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (10th March)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI – BHANDUP (4PM – 6:30PM)**
Bright High School, Village Road,
Bhandup (W), Mumbai – 400078
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (17th March)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road (opp Arasu
Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station RoadZion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM - 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road. 8344433800 |
9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (23rd March)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (24th March)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM - 5PM)**
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM - 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547




ON SUNDAY 31st March
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH


தகவல்: காலேப்




# இரயில் பயணம்...

(விக்னேஷ் வழக்கமாக நிற்கும் பிளாட்பார்மில் நண்பன் ஆண்ட்ருவிற்காக காத்திருக்கிறான், இருவரும் பல ஆண்டுகளாக ஒரே ரயிலில் அலுவலகத்திற்கு செல்லும் நண்பர்கள் )

சென்னை நுங்கம்பாக்கம் இரயில் நிலையம்...



**விக்கி:** 'என்ன வழக்கமாக எனக்கு முன்னாடியே வந்துருவான், இன்னைக்கு இவ்வளவு நேரம் ஆச்சு இன்னும் ஆள காணோம்' என்று யோசித்து கொண்டே நிற்கும் போது விக்கியின் தோளில் யாரோ கை வைத்தார்கள். திரும்பி பார்த்தால் ஆண்ட்ரு.

**ஆண்ட்ரு:** என்ன விக்கி பயந்துட்டியா நான்தான்... கொஞ்சம் late ஆயிடுச்சி..

**விக்கி:** ஆமா! ஏன் late?

**ஆண்ட்ரு:** அது ஒரு பெரிய கதை train வந்துருச்சு, முதல்ல trainல ஏறி ஜன்னல் சீட் பிடிப்போம் அப்புறம் சொல்றேன்.

இரண்டு பேரும் உட்கார்ந்து பேச துவங்கினர்.




அருகில் கைபேசியில் ஒருவரின் வீடியோவைப் பார்த்து சிரித்து கொண்டிருந்தவரின் மீது இருவரின் கவனமும் திரும்பியது. இந்தியாவில் பிரபலமானவர்கள் அரசியல்வாதிகள் அவரவர் குரலில் சினிமா பாடல்கள் பாடுவது போல் AI தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வீடியோ தான் அது...

**விக்கி:** ஆண்ட்ரு... இந்த AI (Artificial Intelligence) வந்ததற்கு அப்புறம் உலகமே தலைகீழா மாறிடுச்சுல...நீ என்ன சொல்ற?




**ஆண்ட்ரு:** (சலித்து கொண்டே) வர வர AIனால என்ன என்ன பிரச்சனை வரப்போதுனு தெரியல...

**விக்கி:** (நக்கலாக சிரித்துக் கொண்டே) இவன் யாருடா! எப்ப பார்த்தாலும் பூம்மர் மாதிரி பேசி கிட்டு AIயால் எவ்வளவு நன்மை இருக்கு தெரியுமா? நானும் இத பத்திலாம் படிச்சிருக்கேன்.

AI மனிதர்களுடைய வேலையை சுலபமாக்குவதால் வேலை செய்கிற நேரம் மிகவும் குறைந்து விடுகிறது.

மனிதர்கள் செய்யும் தவறுகளை அது குறைக்கிறது, 24 மணி நேரமும் வேலை செய்யும், ஆழ்கடலில், வேறு கிரகங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு மனிதர்கள் போக முடியாத இடங்களுக்கு செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் ரோபோக்கள் போக முடியும் என்று நீண்ட பட்டியலை சொல்லி முடித்தான்

**ஆண்ட்ரு:** மெல்லிய சிரிப்போடு! விக்கி நீ சொன்னதுலாம் சரிதான். ஆனா அது ஒரு பக்கம் தான்...

இந்த AI இப்போ பார்க்க நன்றாகத்தான் தெரியும், ஆனால் இது நாளடைவில் மனிதர்களை சோம்பேறிகளாக்கி விடுகிறது. மனிதர்களுக்கு கடவுள் கொடுத்த விலையேறப் பெற்ற யோசிக்கும் திறன், புதிய காரியங்களை வடிவமைக்கும் திறனை குறைத்து அவர்களின் மூளையை மழுங்கிப் போக செய்து முழுக்க முழுக்க இயந்திரத்தை சார்ந்து வாழ வைத்து விடுகிறது. அது மாத்திரமல்ல AI தொழில்நுட்பம் மூலம் பெண்களை தவறாக சித்தரித்து வீடியோக்களை சமூக விரோதிகள் வெளியிடுகின்றார்கள். இப்போ நீ வேலை செய்யுற IT கம்பனியில் கூட இந்த தொழில்நுட்பத்தை கொண்டுவருவதை குறித்து பேசுறாங்களா?

**விக்கி:** (யோசித்தபடியே) ஆமா...அதுக்கு என்ன?

**ஆண்ட்ரு:** ஹம்..அப்போ சீக்கிரமா வேற வேலை தேட ஆரம்பிச்சிரு...

**விக்கி:** ஏன் அப்படி சொல்ற...என் வேலை secured தான். (குழப்பமான குரலில்)

**ஆண்ட்ரு:** நீ தான் சொல்லிக்கனும். AI தொழில்நுட்பத்தினால் அநேகருடைய வேலை பறிபோகப்போது. இதனால் வேலையில்லா திண்டாட்டம் அதிகரிக்கும்னு சொல்லியிருக்காங்க. உலகில் உள்ள 37% தொழில் தலைவர்கள் 2023 ஆண்டில் தங்கள் கம்பெனியில் மனிதர்களை நீக்கி விட்டு அதற்கு பதிலாக AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருகிறார்களாம். உனக்கு doubtனா இந்த வாட்ஸ்ஆப் ல ஒரு QR code அனுப்புறேன் ஸ்கேன் பண்ணி பாரு.

**விக்கி:** அடக்கடவுளே! இவ்ளோ பிரச்சனை இதுல இருக்குனு தெரியாம போச்சே! அப்போ இதுக்கலாம் என்ன தான் தீர்வு ?

**ஆண்ட்ரு:** ஜெபம் தான் ஒரே தீர்வு, உலகத்துல என்ன பிரச்சனை வந்தாலும் 'எல்லா தீங்குக்கும் விலக்கி காப்பேன்' என்று இயேசு வாக்கு கொடுத்திருக்கிறார். நீயும் அவர் கிட்ட ஜெபம் பண்ணு.

**விக்கி:** உனக்கு ஒரு சான்ஸ் கிடச்சிர கூடாதே சைக்கிள் gapல உன் மதத்த பத்தி சொல்லிருவியே...கில்லாடி டா நீ..பாப்போம் உன் கடவுள் என்ன செய்கிறார் என்று. சரிடா நாளைக்கு பாப்போம் என்று அவன் இறங்கும் இடம் வந்ததும் விடைபெற்றுச் சென்றான்.

**(ஆண்ட்ரு இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன், விக்கி கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவன்)**

இவர்கள் இருவரின் உரையாடல்கள் தொடரும்...



சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி - 2



**Hi friends..!** எல்லாரும் எப்படி இருக்கீங்க? இத்தொடரில் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கடந்த மாதத் தொடரில் நாம் தீமோத்தேயுவின் சிறு பிராயம் பற்றியும் அவர் தனது சிறு பிராயத்திலேயே வேத எழுத்துக்களை கற்றுத் தேர்ந்தார் எனவும், அவருடைய பாட்டி மற்றும் தாய் இயேசு கிறிஸ்துவின் மீது வைத்திருந்த விசுவாசத்தை பற்றிக் கொண்டார் எனவும் பார்த்தோம்.

## Non-Stop வளர்ச்சி:

ஒரு விதையை விதைத்தால் அதற்கு நன்றாக தண்ணீர் ஊற்றி அதை பராமரிக்கும் பொழுது அது நல்ல மரமாக வளர்ந்து ருசியுள்ள கனிகளை கொடுக்கும் தானே. அதுபோல பவுல் தீமோத்தேயுவுக்குள் விதைத்த விதை நன்றாக பராமரிக்கப்பட்டு நற்பண்புகள் என்னும் அருமையான கனிகளைக் கொடுக்கத் துவங்கியது.

தனது பதின் பருவத்திலேயே அவர் மீது பற்றவைக்கப்பட்ட இயேசுவின் நேசத் தீ இளம் பருவத்தில் அணைந்துதான் போகுமோ? தீமோத்தேயு தான் கிறிஸ்துவை பின்பற்றும் காரியத்தில் எடுத்த தீர்மானத்தில் திகைத்து தான் நின்றாரோ? இல்லை. அது உணர்ச்சிவசப்பட்டு எடுத்த தீர்மானம் இல்லை அல்லவா? உணர்வுப் பூர்வமாய் உறவாய் தன்னுடன் இணைந்த கிறிஸ்துவின் மேல் உள்ள அன்பை ருசித்ததின் நிமித்தம் எடுத்த தீர்மானம். அது, தன் இளம் பிராயத்திலும் கிறிஸ்துவுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று அவரை உந்தித் தள்ளியது. என்ன தான் சிறு வயதில் வைராக்கியமாக இருந்தாலும்,வாலிப வயதில் கொஞ்சமாவது உலகத்தை எட்டிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை எழும் அல்லவா? ஆனால் நம்ம தீமோத்தேயு கொஞ்சம் Differentங்க வாங்க பார்க்கலாம்.

பவுல் முதல்முறையாக லீஸ்திராவுக்கு சென்று சுவிசேஷம் அறிவிக்கும் பொழுது இரட்சிக்கப்பட்டு விசுவாசியான தீமோத்தேயுவை, இரண்டாவது முறையாக அங்கு சென்ற பொழுது ஒரு நல்ல சீஷனாகக் கண்டார் (அப் 16:1). விசுவாசி என்பவர் தேவனிடமிருந்து எதையாவது ஒரு விஷயத்தை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறவராக இருப்பார். ஆனால் சீஷன் என்பவன் தன்னையே தேவனுக்காக அர்ப்பணிக்கிறவனாகவும், கற்றுக் கொள்கிறவனாகவும், கற்றுக் கொள்வதை பின்பற்றுகிறவனாகவும் அதை கடைபிடிக்கிறவனாகவும் இருப்பான்.

அப்பப்பா ஒரு விசுவாசிக்கும், சீஷனுக்கும் எத்தனை வித்தியாசம் பார்த்தீர்களா? தீமோத்தேயு தேவனிடத்தில் எதையாகிலும் அல்ல தேவன் தன்னிடத்தில் எதிர்பார்க்கும் காரியங்களை நிறைவேற்றும் ஒரு நல்ல சீஷனாகவே மாறியிருந்தார்.

எவ்வளவு பெரிய ஆவிக்குரிய வளர்ச்சி பாருங்க friends. ஒரு நல்ல சீஷனுக்குரிய அத்தனை தகுதியும் உடையவராய் தீமோத்தேயு இருந்தார். தீமோத்தேயு இயல்பிலேயே பயந்த சுபாவம் உடையவர் (1 கொரி 16:10). ஆனால் இயேசு சொன்னது போல் தன்னையும், உலகையும் வெறுக்கவும், சிலுவையை சுமக்கவும் துணிச்சல் கொண்டார். (அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்... மத்தேயு 16:24)

நாமும் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போமே. நாம் இரட்சிக்கப்பட்டு எவ்வளவு வருடங்கள் ஆகின்றன. ஆனால் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி எவ்வாறு இருக்கிறது? நாம் விசுவாசியாகவே இருக்கிறோமா அல்லது உலகை வெறுத்து சிலுவை சுமக்க தன்னை மெருகேற்றிய தீமோத்தேயுவைப் போல சீஷனாக இருக்கிறோமா?

## நற்சாட்சியுள்ள தீமோத்தேயு:

பொதுவாகவே இளைஞர்களாகிய நாம் நமக்கென்று Role model வைத்திருப்போம். நாம் யாரால் அதிகமாக ஈர்க்கப்படுறோமோ அவங்கள மாதிரி Dress பண்ணிக்கணும், அவங்கள மாதிரி Hair Style பண்ணிக்கணும் அப்படின்னு நிறைய ஆசை இருக்கும். போகப்போக அவர்களை நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்கிறவர்களாகவே மாறிவிடுவோம்.



இயேசு கிறிஸ்துவால் அதிகமாக ஈர்க்கப்பட்ட தீமோத்தேயுவும் அப்படித்தான். இளமையில் இயேசுவை தன் வாழ்க்கையில் பிரதிபலிக்கத் துவங்கினார். அவருடைய இளமையைக் குறித்து ஒருவரும் குறை சொல்ல முடியவில்லை. அப் 16:2ல் 'அவர் சகோதரராலே நற்சாட்சி பெற்றவராக இருந்தார்' என்று வாசிக்கிறோம். சொந்த ஊரிலே சாட்சியாக வாழ்வது ஒரு கடினமான காரியம். ஆனால் தீமோத்தேயு இக்கோனியாவிலும், லீஸ்திராவிலும் நற்சாட்சியுடையவராய் இருந்தார். அவருடைய நற்சாட்சியினால் ஈர்க்கப்பட்ட பவுல் தீமோத்தேயுவை தன்னுடன் ஊழியத்தில் வைத்துக் கொண்டார்.

இன்று நம்முடைய சாட்சி எப்படிப்பட்டதாக இருக்கிறது? நம்மைப் பற்றி நம்முடைய சுற்றத்தார் என்ன சொல்லுகிறார்கள்? நம்முடைய வீட்டார் என்ன சொல்லுகிறார்கள்? இளமையில் நற்சாட்சி பெறுவது என்பது ஒரு கடினமான காரியம் தான். ஏனெனில் மொத்த உலகத்தினுடைய பார்வையும் நம்மீது தான் இருக்கும். ஒரு தவறான காரியம் நம்முடைய வாழ்வில் இருந்தால்' அது நம்முடைய வாழ்க்கை முழுவதும் சிவப்பு நிறத்தில் எழுதப்பட்டிருப்பது போல அனைவரும் அதைத்தான் சுட்டிக் காண்பிப்பார்கள்.

நமக்கு நல்ல சாட்சி இருக்குமானால் நம் இளமையை யாரும் அசட்டை பண்ண மாட்டார்கள். நாம் நம்முடைய வாழ்வில் எதை இழந்தாலும் திரும்ப பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் நற்பெயரை இழந்து விட்டால் அதை திரும்பவும் பெறுவது மிகக் கடினம்.

### ச்ச... எப்படிங்க தீமோத்தேயுவால் மட்டும் இப்படி வாழ முடிஞ்சது?

**தீமோத்தேயு நினைத்திருந்தால் தன் இஷ்டப்படி வாழ்ந்திருக்கலாம்.ஆனால் அவர் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவராக, தேவனை கனப்படுத்துகிறவராக, தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறவராக இருந்ததால் மட்டுமே, இன்று அவர் நம்மைப் போல் உள்ள பல இளைஞர்களுக்கு சவாலாக உள்ளார். கண் போன போக்கில் காணாது, கால் போன போக்கில் நடவாது, மனம் போன போக்கில் சிந்திக்காது தம் ஐம்புலன்களையும் அடக்கி ஆண்டு, அகிலத்தைப் படைத்த ஆண்டவருக்கு தன்னை சமர்ப்பித்த தீமோத்தேயுவைப் போல நல்ல சீஷனாக வாழ்ந்து காட்ட நீங்கள் ஆயத்தமா? நமக்கு அவ்வப்போது Hi சொல்லும் பாவக்காரியங்களுக்கு துணிச்சலாக Bye சொல்லிவிட்டு, இயேசு கிறிஸ்துவை நம்முடைய வாழ்வில் பிரதிபலித்து நற்சாட்சி உடையவராய் வாழ ஆயத்தமா?**

**இதேபோல் தீமோத்தேயுவைப் பற்றி இன்னும் பல சுவாரசியமான காரியங்களை அடுத்த தொடரில் நாம் காண்போம்.**

**- வீர சகாப்தம் தொடரும்...**

# NISWIN BERIYTH

## (திருமண உடன்படிக்கை)

பகுதி - 2

தகவல்: வயலா

இன்றைய இளைய சமுதாயத்தினர் திருமணத்தை உலகப் பிரகாரமாக செய்யும் வேலை ஒப்பந்தம், வாடகை வீடு ஒப்பந்தம் போல் சாதாரணமாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். கருத்து வேறுபாடு, மன கசப்பு ஏற்படும் பொழுது எப்பொழுது வேண்டுமானாலும் முறித்துக் கொள்ளலாம் அல்லது மாற்றிக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொள்கின்றனர். திருமண உடன்படிக்கை என்பது மனிதனை உருவாக்கிய தேவன் தங்கித் தாபரிக்கும் பரிசுத்த தேவாலயத்தில், தேவனின் முன்னிலையில், சகல பரிசுத்தவான்கள் மற்றும் விசுவாச குடும்பத்தார்கள் சாட்சியாக நிற்கும் போது கணவன்-மனைவி இருவரும் தேவனோடு செய்யும் பரிசுத்த உடன்படிக்கையாகும். பூமியில் வாழும், வாழப்போகும் இருவர் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் சந்திக்கும் எல்லா சூழ்நிலைகளிலும் 'இவ்வாறு' இருப்பேன் என்று தங்களைப் படைத்த, ஒன்றாய் இணைத்த, பரலோகத்தில் உள்ள தேவனோடு செய்யும் உடன்படிக்கை. நன்றாகக் கவனியுங்கள்! அதாவது பூமிக்கும் பரலோகத்துக்கும் இடையே ஏற்படுத்தப்படும் ஒப்பந்தம்.



அப்படியென்றால், திருமண உடன்படிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்ந்துக் கொள்ளுங்கள். திருமணத்தன்று வாழ்க்கைத் துணையின் கரம் பிடித்து, இன்பத்திலும், துன்பத்திலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், சுகவீனத்திலும் நாம் உயிரோடிருக்குமளவும், நேசிக்கவும், ஆதரிக்கவும், கீழ்ப்படியவும் வாக்குக்கொடுத்து விட்டு அதை மாற்றவோ, மறக்கவோ கூடாது. வாயினால் வாக்குக் கொடுத்து விட்டு, பின் அது ஒரு சாதாரண நிகழ்வாக, கனவாக, விபத்தாக நினைத்து மறந்து விடுகிறேன். அறியாமையினால் சொல்லி விட்டேன் என்றெல்லாம் சிறுபிள்ளைத்தனமாக கூற முடியாது. **“தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு;... உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே” (பிரசங்கி 5:2,6)** என்று பிரசங்கி எச்சரிக்கிறார்.

வாயினால் ஒரே ஒரு முறை சொல்வது அவ்வளவு முக்கியமா? என்று தானே சிந்திக்கிறீர்கள். வேதத்திலும் கூட ஏசா தன் சேஷ்ட புத்திர பாகத்தை தன் சகோதரனுக்கு ஆணையிட்டுக்

கொடுத்தான் (விற்றுப்போட்டான்) என்ற சம்பவத்தை (ஆதி. 25:33) அறிந்து இருக்கிறோம். அந்த இடத்தில் எந்த நீதிபதியோ, வழக்கறிஞரோ, பத்திர பதிவாளரோ இருந்து எழுத்து வடிவ ஆவணம் உருவாக்கவில்லை. வாயினால் ஒரு முறை சொன்னது தான் அப்படியே நிறைவேறியது. ஏசா மூத்தவராக, சேஷ்ட புத்திர ஆசீர்வாதத்திற்கு உரியவராகவே பிறந்து இருந்தாலும், அதை அநேகர் அறிந்து, சாட்சியாக இருந்தாலும், அவரால் சேஷ்ட புத்திர ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க முடியவில்லை. பிற்பாடு அவர் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும், ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பியும், ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள் (எபி. 12:17). பாருங்கள், வாயின் வார்த்தை எவ்வளவு முக்கியமென்று? அதிலும் தேவ சமுகத்தில் சொல்லிவிட்டால் அதன் முக்கியத்துவத்தை வார்த்தைகளினால் எழுத முடியாது என்றே கூற வேண்டும்.



ஒரு வேளை திருமண வாழ்க்கை கடினமானதாக, வாழவே முடியாததாய் அமைந்து விடுமோ என்று அஞ்சி வாழ்வோர் பலருண்டு. அப்படி ஒரு சூழ்நிலை இனி திருமணம் ஆகப் போகும் எங்கள் வாலிபச் செல்லங்கள் யாருக்குமே வரக்கூடாது என்பதே **Nisuin Beriyth** என்னும் இத்தொடர் கட்டுரையின் பிரத்யேக நோக்கமாகும்.

**தெரிந்தெடுத்தல்:** வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பினை உங்களை சிருஷ்டித்த தேவனிடம் ஒப்புக் கொடுக்கும் போது தேவன் வளமுள்ள, செழிப்பு மிகுந்த, மகிழ்ச்சி பொங்கும் குடும்ப வாழ்வை அமைத்து ஆசீர்வதிப்பார் என்பதில் சந்தேகமில்லை. சுயமாக வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் போது, தெருவினுள், அலுவலகத்தினுள், ஆலயத்தினுள் என்று சிறிய வட்டத்துக்குள்ளே தெரிந்தெடுக்கக் கூடும். ஆனால் தேவனிடம் பொறுப்பு கொடுக்கப்படும் போது எந்த நாட்டிலும், எந்தக் கண்டத்திலும் இருந்தும்கூட ஒருவரது சிந்தனை, எதிர்பார்ப்பிற்கு மேலாக ஏற்றத் துணையை தேவன் கொண்டு வரக்கூடும்.

வேதத்திலும்கூட வசிக்கும் இடத்தை 'தெரிந்துக் கொள்ளுதல்' என்ற பொறுப்பு லோத்தின் கைகளில் கொடுக்கப்படும் சம்பவம் ஆதியாகமம் 13ம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆபிராம் தன் சகோதரன் மகன் தன்னை விட வயதில் சிறியவனாக இருந்தாலும், நீ வலது புறம் போனால் நான் இடது புறம் போகிறேன். நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறென் என்று விட்டுக் கொடுக்கிறார். ஆனால் லோத்தோ, தந்தை ஸ்தானத்தில் இருக்கும் ஆபிராமிடமும் ஆலோசனைக் கேட்கவில்லை. தேவ ஆலோசனையும் பெற விரும்பவில்லை. மாறாக, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, நீர்வளம் பொருந்தினதாயிருந்த சோதோம் கொமோரா பட்டணத்தை சுயமாகத் தெரிந்தெடுத்தார். இயற்கை வளம் செழிப்பாக இருந்தாலும் இறை பயம் இல்லாத ஜனங்களினால் அக்கினிக்கு இரையாகிப் போனது அவர் தெரிந்துக் கொண்ட பட்டணம். முடிவோ, சிதைந்த குடும்ப வாழ்வும், சாபமான சந்ததியுமே.

**இன்னும் பல வேத சம்பவங்கள் மற்றும் எளிய ஆலோசனைகளுடன் Nisuin Beriyth தொடரும்...**



எச்சரிப்பின் செய்தி ஜாய்லின்

# நைசா நரகம்!

பகுதி - 2

Hello Friends போன மாதம் நரகத்தைப் பற்றி நிறைய Interesting Facts தெரிந்து கொண்டோம் right? Like நரகம் எப்படி இருக்கும்? நரகத்தை யாரு படைச்சது? நரகம் யாருக்காக படைக்கப்பட்டது? நிறைய Questionsக்கு Answers தெரிஞ்சிகிட்டோம். So இந்த மாதத்திலிருந்து, சாத்தான் எப்படிப்பட்ட காரியங்களை நமக்கு ஆசைகாட்டி, நம்மை பாவம் செய்ய வைத்து, நரகத்திற்கு டிக்கெட் கொடுத்து அனுப்பப் பார்க்கிறான் என்று பார்க்கப் போகிறோம். பரிசுத்த வேதாகமம், ''பாவம் செய்யும் ஆத்துமா சாகும்'' என்று கூறுகிறது. அப்படி நாம் செய்யும் எந்தெந்த பாவங்கள் நம்முடைய ஆத்துமாவை சாகடித்து நித்திய நரகத்திற்குள்ளாக்கும் என்று ஒரு பெரிய List Bibleல இருக்கு. இம்மாதம் முதலாவதாக பாலியல் பாவங்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

## எவையெல்லாம் பாலியல் பாவங்கள்?

விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், ஓரினச்சேர்க்கை (**LGBTQ**), சுயப்புணர்ச்சி (**Masturbation**), மிருகப்புணர்ச்சி (**Mating with animals**) முதலானவை. இப்படிப்பட்ட பாவத்தை செய்கிறவர்கள் பரலோகத்திற்கு செல்ல முடியாது என்று வேதம் சொல்லுகிறது. (1 கொரி. 6:9, 10; கலா. 5:19-21)

திருமணத்துக்கு முன்பு தவறான உறவு வைத்து கொள்வது வேசித்தனம் (**pre-marital sex**). இன்று அநேக வாலிபர்கள் பெற்றோருக்கு தெரிந்தோ தெரியாமலோ படிப்பிற்காக அல்லது வேலைக்காக வீட்டை விட்டு வெளியூருக்கு சென்று தங்கி இருக்கும் இடங்களில் **Live-in relationship** என்ற பெயரில், தாங்கள் விரும்பும் நபருடன் திருமணத்திற்கு முன்பதாகவே தவறான உறவில் இருக்கின்றனர். இன்னும் சிலர் **friends party, night out, pub** போன்ற களியாட்டுகளில் மது அருந்தி முன் பின் தெரியாத ஒரு நபருடனோ அல்லது நண்பர்களுடனோ தங்கள் இச்சைகளை நிறைவேற்றி கொள்ள தவறு செய்கின்றனர். இன்னும் பலர் **Friends with benefits** என்று சொல்லிக்கொண்டு தங்களின் அழகான வாலிபப்பருவத்தை அசுத்தமாக்கிக் கொண்டிருக்கின்றனர்.



இதனோடு ஓரினச்சேர்க்கை (**LGBTQ** – ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் உறவு வைத்துக் கொள்வது) பாவமும் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இந்த காலத்தில் பெருகிக் கொண்டு வருகிறது. **Yearly once, Pride Paradise** என்று பேரணி நடக்கிறது. இது தேவனை கோபப்படுத்துகிற, துக்கப்படுத்துகிற, தேவன் அருவருக்கிற பாவம். சோதோம் கொமோரா பட்டணம் அழிந்ததற்கு காரணம் இந்த பாவம் தான். இந்த பாவங்கள் எல்லாம் வாலிபர்கள் மத்தியில் பெருகுகிறதற்கு முக்கிய காரணம் ஆபாச வலைத்தளங்கள் (**Porn Websites**). இதை பார்த்து அநேக வாலிபர்கள் தங்கள் சொந்த சரீரங்களை தீட்டுப்படுத்துகிறார்கள், பல பாலியல் குற்றங்கள் இதனால் நடைபெறுகின்றன. ''மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்''
(1 கொரிந்தியர் 6 : 18) என்று வேதம் கூறுகிறது.

திருமணத்துக்கு பிறகு தவறான உறவு வைத்து கொள்வது விபச்சாரம் (Extra-marital affair). அநேக வாலிபர்கள் திருமணத்திற்கு முன்பு வேறொருவரை காதலித்து விட்டு, ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்து மற்றொருவரை திருமணம் செய்கின்றனர். திருமணத்திற்கு பிறகு Facebook அல்லது Instagram போன்ற சமூக வலைத்தளங்கள் மூலமாக நெடுநாளாய் துண்டிக்கப்பட்டிருந்த உறவை மீண்டுமாக புதுப்பித்துக்கொள்கின்றனர். Chatting, audio calls, வீடியோ கால்ஸ், meeting என மெல்ல மெல்ல சூடுபிடித்து இறுதியாக திருமண உடன்படிக்கையை உடைத்து தங்கள் வாழ்க்கை துணைக்கு துரோகம் செய்கின்றனர். இதனால் குடும்ப வாழ்க்கையில் பெரும் சிக்கல்களை (சந்தேகம், சண்டைகள், divorce) சந்திக்க நேரிடுகிறது. ''விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக' (எபிரெயர் 13: 4) என்று வேதம் சொல்கிறது.

இந்த Sexual sinsஐ நீங்கள் விளையாட்டாக நினைக்கலாம். உலகத்தில் யாரும் செய்யாததையா நான் செய்து விட்டேன் என்று கூட நினைக்கலாம். ஆனால் இதன் விளைவுகள் மிகவும் மோசமானவை. திருமணத்திற்கு முன் ஒருவருடன் கொண்டிருந்த தவறான உறவுகளின் நினைவுகள் உங்கள் ஆழ்மனதில் பதிந்து நீங்கள் வேறொருவரை திருமணம் செய்த பின்பு வாழ்க்கை முழுதும் உங்களுக்கு குற்ற உணர்ச்சியை கொடுத்துக்கொண்டே இருக்கும். உங்களால் ஒரு இயல்பான குடும்ப வாழ்க்கையை உங்கள் வாழ்க்கை துணையோடு மேற்கொள்ளமுடியாமல் நாளடைவில் விவாகரத்தில் முடியக்கூடும். அது மட்டுமின்றி பல உடல் ரீதியான நோய்களுக்கு (HIV, STDs, Syphilis, gonorrhoea, hepatitis B) இப்பாவங்கள் வழிவகுக்கும். பலர் மனரீதியான நோய்களுக்கும் உள்ளாகின்றனர்.



பழைய ஏற்பாட்டில் விபச்சாரம் வேசித்தனம் ஓரினச்சேர்க்கை போன்றவை தேவன் வெறுக்கும், அருவருக்கும் மிகப் பெரிய பாவங்களாகக் கருதப்பட்டன. ஆனால் புதிய ஏற்பாட்டில் ஒரு பெண்ணை, ஆண் இச்சையான எண்ணத்தோடு பார்த்தாலே அது விபச்சாரம் என்று வேதம் சொல்கிறது.

இந்த பாலியல் பாவங்களின் பிறப்பிடம் கண் தான். இச்சையான ஆபாசமான காரியங்களை நாம் காணும்போது முதலாவது கண்களின் வழியே அவை உள்ளே சென்று சிந்தனையை கறைபடுத்தி அடுக்கடுக்காய் அசுத்தமான காரியங்களை செய்ய வைக்கும். பின் இது அந்த மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் என அனைத்தையும் பாதிக்கும். **"கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்" (லூக்கா 11:34).** நாம் செய்யும் இந்த பாவங்களின் விளைவு ஆத்தும மரணம். பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23).

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன் வரை தேவன் பரிசுத்தமுள்ள தேவாலயங்களில் வாசம் செய்து வந்தார். ஆனால் பிதா தம்முடைய ஒரேபேறான குமாரனை நமக்காக இந்த உலகத்திலே இரட்சகராக கொடுத்த பின் தேவன் நமக்கு மிகவும் சமீபமாகி மனிதர்களுடைய இதயத்திற்குள் வாசம் செய்யத் துவங்கினார். இந்த சத்தியத்தை அறியாதவர்கள் தான் இத்தகைய பாவங்களை செய்து தேவன் வாசம் செய்யும் தூய ஸ்தலமாகிய தங்கள் சரீரத்தை அசுத்தமாக்கி தேவனையும் துக்கப்படுத்துகிறார்கள். **"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும் அறியீர்களா?" (1 கொரிந்தியர் 6:19).**

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாலிபர்களே! **"உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய், நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்"** என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது (மாற்கு 9 :47). நாம் வாழும் இந்த உலகில் இடறல்கள், சோதனைகள் (temptations) இருப்பது உண்மை தான். எல்லா பாவங்களுக்குப் பின்பாகவும் பிசாசு தான் கிரியை செய்கிறான். அவன் மிகவும் தந்திரமுள்ளவன். சாத்தானின் நோக்கமே இயேசுவுக்காக ஓடுகிற உங்களை எப்படியாவது இந்த பாவங்களை செய்ய வைத்து Niceஆக நரகத்திற்கு கொண்டு போக வேண்டும் என்பதே.

நம்முடைய சுயபெலத்தால் இந்தப் பாவங்களை மேற்கொள்வது கடினம். ஆனால் பரிசுத்த ஆவியானவருடைய உதவியுடன் இவைகளை மேற்கொண்டு முற்றிலும் ஜெயம் கொள்ள முடியும்.

**இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயம்கொள் ளுகிறவர்களாயிருக்கிறோமே (ரோமர் 8:37)**

**Okay friends, அடுத்த மாதம் நரகத்திற்கேதுவான மற்றொரு பாவத்தைக் குறித்து தெரிந்து கொள்ளலாம்.**

# செய்திகள்!

## 2016 முதல் 2022 வரை குழந்தை பாலியல் பலாத்கார வழக்குகள் 96% அதிகரிப்பு!

### ஆய்வறிக்கையில் அதிர்ச்சி தகவல்!



2016ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை குழந்தை பாலியல் பலாத்கார வழக்குகள் 96 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கை அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதும் அவ்வப்போது குடும்ப உறுப்பினர்கள், வெளிநபர்கள் மூலம் குழந்தைகள் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாவதாக செய்திகள் வெளியாகின்றன. இதை பார்க்கும்போது உண்மையிலேயே குழந்தைகளுக்கு எதிராக பலாத்கார குற்றங்கள் அதிகரித்துள்ளதா? அல்லது அதுகுறித்த செய்திகள் அதிகம் வெளிச்சத்துக்கு வந்துள்ளதா? என்ற கேள்வியும் எழுகிறது.

செய்தித்தாள், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களை கடந்து பல்வேறு சமூக ஊடகங்கள் அதிகரித்துள்ளதால் இதுபோன்ற குழந்தை பாலியல் பலாத்கார சம்பவங்கள் பற்றிய செய்திகள் அதிகம் வெளியுலகுக்கு தெரிய வருகிறது. இந்தியாவை பொறுத்தவரை பாலியல் பலாத்காரம் என்றால் என்ன என்பது குறித்த சட்டவரையறையில் மாற்றங்கள் செய்யப்பட்டு, பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டவரின் புகார்களை காவல்துறை வழக்குப் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2016 முதல் 2022ம் ஆண்டு வரை குழந்தைகள் பாலியல் பலாத்கார சம்பவங்கள் 96 சதவீதம் அதிகரித்துள்ளதாக குழந்தை உரிமைகள் தன்னார்வ தொண்டு நிறுவனமான (cry) அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து CRY நிறுவன ஆராய்ச்சி அதிகாரி சுபேந்து பட்டாச்சார்ஜி, "இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளது. அனைத்து வகையான ஊடுருவல் தாக்குதல்களையும் உள்ளடக்கிய விரிவான ஆய்வில் 2016 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் குழந்தை பலாத்கார சம்பவங்கள் 96.8 சதவீதம் அதிகரித்து உள்ளது. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்ட தரவுகளின்படி, 2016ம் ஆண்டில் 19,765, 2017ம் ஆண்டில் 27,616, 2018ம் ஆண்டில் 30,917, 2019ம் ஆண்டில் 31,132, 2020ம் ஆண்டில் 30,705, 2021ம் ஆண்டில் 36,381 மற்றும் 2022ம் ஆண்டில் 38,911 குழந்தை பாலியல் பலாத்கார வழக்குகள் பதிவாகி உள்ளன.

குழந்தை பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய வெளிப்படையான விவாதங்களை ஊக்குவிப்பது, சமூக தீர்ப்பு மற்றும் எந்த அச்சமுமின்றி பாதிப்பு குறித்து பேசுவதும், புகாரளிப்பதும் தற்போது அதிகரித்துள்ளது. குழந்தை பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான நேர்மறையான விசாரணை, வழக்கு மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதில் சிக்கல்கள் நீடிக்கின்றன.

பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக அதிக வழக்குகள் பதிவு செய்யப்பட்டாலும், இந்த வழக்குகளை தடுக்க சட்டங்களை அமலாக்குவது, அதனை நீதித்துறை எவ்வாறு கையாளுகின்றன என்பதை மதிப்பீடு செய்வது அவசியம்" என்று இவ்வாறு தெரிவித்துள்ளார். **- தினகரன், 29 ஜனவரி 2024.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

சிறப்புக் கட்டுரை: ஜிஷ்யா



# போதிக்கும் தேவன் நம்மோடு!!



**“மனதிற்குள் பல ஆசைகள், உயரங்களை அடைய வேண்டும் என்ற ஏக்கம் இருக்கு, ஆனால் ஆசைப்படுகிற உயரத்தை அடைய முடியவில்லையே, ஏன்? என்று யோசிக்கிறீர்களா?” அப்படியானால் இந்த சம்பவம் உங்களுக்காக.**

Shriya Shah-Klorfine (ஷ்ரேயா ஷா-க்ளோர்ஃபைன்) என்ற இளம்பெண் ஒன்பது வயது சிறுமியாக இருந்தபோது அவரும் அவரது பெற்றோரும் ஹெலிகாப்டரில் எவரெஸ்ட்டுக்கு சென்றுள்ளனர், அன்றிலிருந்து 8,850 மீட்டர் உயரமான Mt. Everestன் உச்சியை அடைய வேண்டும் என்று ஒரு இலக்கை நிர்ணயித்து, இந்த உயரத்தை அடைய திட்டமிட்டு பயிற்சியும், முயற்சியும் எடுத்தார்கள். தன்னுடைய வீட்டையும் $1,00,000 USDக்கு அடகு வைத்து, இந்த இலக்கை அடைய எதுவும் தடையாக இருந்து விடக்கூடாது என்று Risk எடுத்தார்கள்.

2012ம் ஆண்டில் Mt. Everest ஏறத் துவங்கினார்கள். மேலே ஏற, ஏற கடினமாக இருந்தாலும் ‘இது என் வாழ்நாள் இலட்சியம், இதனை அடைந்தே தீருவேன்’ என்ற உத்வேகமும், உற்சாகமும் இருந்தது. உச்சத்திற்கு போகக் கூடிய பயணத்தில், 17 மணி நேரம் தொடர்ந்து ஏறினார். ஆனால் வானிலை சரியாக இல்லை ‘இங்கேயே நிறுத்திக் கொள்ளுங்கள்’, உங்கள் சரீரத்திற்கு கொஞ்சம் ஓய்வு கொடுங்கள் என்று பலர் சொன்ன போதும், அந்த ஆலோசனைகளைக் கேட்க மறுத்து பயணத்தை தொடர்ந்தார் Shriya. ஆனால் அவர் சோர்வு மற்றும் உயரநோய்க்கு (Altitude sickness) ஆளானார்.

இந்நிலையில் பலத்த காற்றினால் அவர்கள் ஏறிக்கொண்டிருந்த மலைப்பகுதி தாக்கப்பட்டது. சில மணி நேரங்களில், ‘‘காப்பாற்றுங்கள்’’ என்ற சத்தம் கேட்க, காப்பாற்ற யாராலும் முடியவில்லை. தன்னுடைய 33ம் வயதில் Shriya தன் இலக்கை அடையாமல் மரித்து விட்டார்கள். $1,00,000 USD அடமானமாக வைக்கப்பட்ட வீடும் போச்சு, உயிரும் போச்சு, அவருடைய கணவர் மனதளவில் பாதிக்கப்பட்டதாக சொல்கிறார்கள்.



**இந்த உண்மை சம்பவத்தை சற்று ஆராய்ந்து பார்த்தால் Shriyaவிடம்**

- தன்னம்பிக்கை இருந்தது
- பயிற்சி இருந்தது
- துணிவு, ஆற்றல், கனவு எல்லாம் இருந்தது.

ஆனால், சரியான திட்டமிடுதல் இல்லை. 17 மணி நேரம் ஓய்வெடுக்காமல் ஏறியது முதல் தவறு, வானிலை சரியில்லை, ஆபத்து என்று அறிந்ததும் பயணத்தை தவிர்த்திருக்கலாம். ‘மேலே ஏற’ கனவு கண்ட Shriya Shah, ‘கீழே இறங்க’ திட்டமிடவில்லையே.நாமும் ‘உயரத்தை அடைய’ கனவுகள் காண்கிறோம். ஆனால் அடைந்த உயரத்தை தக்க வைப்பதைப் பற்றி யோசிப்பதில்லை. இந்த நேரத்தில் இந்த முயற்சி எடுக்கலாமா? என்று சிந்திக்காமல், உணர்ச்சிவசப்பட்டு வேகத்தோடு செயல்படுகிறோம்.

‘‘எல்லாமே சாதிக்கலாம்’’, ‘‘எல்லாமே முடியும்’’ என்று சொன்னவர்களால் சாதிக்க முடியவில்லை. ஆனால், நம் தேவனால் கூடாதக் காரியம் ஒன்றுமில்லை! ‘‘என்னால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?’’ என்று கேட்ட தேவன் உங்களோடும், என்னோடும் இருக்கிறார். நாம் அவருடன் இணைந்து திட்டமிடும் போது, அவர் நம்முடன் அமர்ந்து கற்றுத் தந்து, காலத்தையும் நேரத்தையும் அழகாக போதிக்கும் போது தோல்வியை தவிர்க்கலாம்!

**வேதத்தில், ஆதியாகமம் 6-8ம் அதிகாரங்களில் நோவாவைக் குறித்து வாசிக்கிறோம். உலகின் மிகப் பெரிய Engineering Projectஐ தேவன் நோவாவுக்கு கொடுத்தார். தேவன் வடிவமைப்பாளராக, நிர்வகிப்பாளராக இருந்ததால் நோவா தனி நபராக இருந்து வெற்றியாக நிறைவேற்றி முடித்தார். எப்படி செய்ய வேண்டும்? எதை பயன்படுத்தி செய்ய வேண்டும்? எப்பொழுது எதை செய்ய வேண்டும் என்பதை எல்லாம் நோவாவிற்கு போதித்து, வெற்றியைக் கொடுத்த தேவன் இன்றும் உங்களோடு இருக்கிறார். அவரோடு கைக்கோர்த்து இலக்கை திட்டமிடுங்கள், ஜெயம் எடுங்கள்!**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 02 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

நாலுமாவடியில்....

Revival IGNITERS CAMP

# எழுப்புதலைப் பரவச் செய்வோர் பயிற்சி முகாம்...

வரப்போகிற எழுப்புதலில் எழும்பி பிரகாசிக்க, தமிழ்நாட்டில் உள்ள வாலிபர்களுக்கு! **ஓர் அரிய வாய்ப்பு**

வயது : 15 வயது முதல் 30 வயதுவரை (ஆண், பெண் இருபாலரும்)

நாள்: மே 3 வெள்ளி காலை 9 மணி முதல்
மே 5 ஞாயிறு மதியம் 1 மணி வரை
(3 நாட்கள்)

இடம்: நாலுமாவடி
தேவனுடைய கூடாரம்

பதிவுக் கட்டணம்:
ரூ. 200/-
மட்டுமே



பயிற்சியாளர்கள் :

**சகோ. மோகன் சி. லாசரஸ்,**
**சகோ. வின்சென்ட் செல்வக்குமார்**



பதிவு செய்ய : revival.jesusredeems.com என்ற இணையதளத்தில் சென்று பதிவு செய்யலாம்.

குறிப்பு: ஏற்கெனவே வாலிபர்களுக்கென்று நடைபெற்ற 3 முகாம்களில் கலந்துகொண்ட வாலிபர்கள் கலந்துகொள்ள அனுமதி இல்லை.

தேர்ந்தெடுக்கப்படும் வாலிப சகோதர சகோதரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தொடர்புக்கு : 9750955547 / 04639-353535

பதிவு செய்ய கடைசி நாள் : மார்ச் 30

ஆந்திரா மாநிலம் - திருப்பதியில்

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

நாள் : ஏப்ரல் 7 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 4 மணி
முதல் இரவு 7 மணி வரை

இடம் : உலக எழுப்புதல் ஜெப மையம்,
அன்லிமிடேட் Show room எதிரில்,
திருப்பதி.



செய்தியும் ஜெபமும் :
**சகோ. சதீஷ்குமார்**

தொடர்புக்கு - 79892 95442 | 94889 38305